| 03. | ஒரு சுவரின் அல்லது விளம்பரப்பலகையில் வெளிக்காட்டப்பட்ட சினிமாக் களியாட்டம் தொடர்பான ஒளியேற்றப்பட்ட விளம்பரம் : அதன் ஒவ்வொரு சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 800.00 | 2,000.00 |
| 04. | ஒரு சுவரில் அல்லது விளம்பரப்பலகையில் வெளிக்காட்டப்பட்ட சினிமாக் களியாட்டம் அல்லது வேறேதும் களியாட்டம் தொடர்பான விளம்பரமொன்றல்லாத விளம்பரமொன்று :அதன் ஒவ்வொரு சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 75.00 | 100.00 |

| | விளம்பரத்தின் விவரணம் | ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு | ஓராண்டுக்கு |
|---|---|---|---|
| 05. | சினிமாக் களியாட்டம் தொடர்பான விளம்பரமொன்றல்லாத ஒளியேற்றப்பட்ட விளம்பரமொன்று :அதன் ஒவ்வொரு சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 200.00 | 300.00 |
| 06. | எவரேனுமானாலும் கொண்டு செல்லப்பட்டதும் அல்லது அசைவுள்ள ஒரு வாகனத்துடன் இணைக்கப்பட்டதும் ஒரு பலகையில் அல்லது ஆதாரத்தில் வெளிக்காட்டப்பட்டதுமான ஒரு விளம்பரம் : | | |
| | (அ) விளம்பரமானது ஏழரை சதுர அடியை விஞ்சாதவிடத்து அதன் ஒவ்வொரு சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 150.00 | 200.00 |
| | (ஆ) விளம்பரமானது ஏழரை சதுர அடியை விஞ்சுமிடத்து, அதன் ஒவ்வொரு சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 200.00 | 300.00 |

01. 2024 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் வியாபார உரிமைப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவதுடன் வியாபார அனுமதிப்பத்திரம் இன்றி நடாத்தப்படுகின்ற வியாபார நடவடிக்கைகள் சட்ட விரோதமானதாகக் கருதப்படும் என்பதுடன் அவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும்.

02. மேற்கூறப்பட்ட கட்டணங்களை செலுத்துவதற்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரியின் குடியிருப்பு மற்றும் வியாாபார நிலையங்களுக்கான ஆதன வரி செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

03. உணவு மற்றும் மனித உடலோடு தொடர்புபட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரி/பொது சுகாதார பரிசோதகரின் சிபாரிசினை பெற்றிருத்தல் வேண்டும்.

04. ஒரு வியாபார நிலையம் மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வியாபார நடவடிக்கைகளை நடாத்துகிறது எனின் அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படாத வேறு எந்த வணிகத்திற்குமான கட்டணங்களும் மாநகர சபையால் தீர்மானிக்கப் படுவதுடன் அதுவே இறுதியானதாகும்.

06. நடைமுறையிலுள்ள ஏனைய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மாநகர சபை அல்லாத திணைக்களங்களின் அனுமதி விண்ணப்பத்தின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

07. மேற்கூறப்பட்ட கட்டணம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

08. வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான விசேட திண்மக் கழிவகற்றல் கட்டணம்

அ. வருடாந்தம் வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான விசேட திண்மக் கழிவகற்றல் சேவைக்கட்டணமாக, குறித்த வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளினால் செலுத்தப்படும் வியாபார உரிமம்/வியாபார வரி/வர்த்தக வரியின் 50% செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆ. மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடை மற்றும் கோழி இறைச்சிக்கடைகள் தவிர்ந்த ஏனைய விசேட வியாபாரங்கள் மற்றும் வியாபார முன்னேற்ற செயற்பாடுகளுக்கு அனுமதி மற்றும் விசேட திண்மக்கழிவகற்றல் கட்டணமாக நாளொன்றுக்கு ரூபா 3000.00 செலுத்துதல் வேண்டும்.

09. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

01 - 377/1

## அக்கரைப்பற்று மாநகர சபை

ஆதனவரி - 2024

மாநகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 238 மற்றும் அதன் உப பிரிவுகளுக்கமைவாக அக்கரைப்பற்று மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் மீதும் ஆதன வரியினை விதித்து அறவிடுவதற்கென சபையின் 2023.12.05 ஆந் திகதிய 04 ஆம் இலக்க தீர்மானத்திற்கமைவாக 01.01.2024 முதல் ஆதன வரி அறவிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

31.12.2023 இல் உள்ளவாறான சொத்துக்களின் மதிப்பீட்டுப் பெறுமதியில் பின்வரும் சதவீதங்களின் அடிப்படையில் வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படும்.

சொத்துக்களின் தன்மையும் வரிவிதிப்பு வீதமும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிற்சாலைகளுக்கு | - | சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 12% |
| 2. | வர்த்தக, வியாபார மற்றும் சேவை நிறுவனங்களுக்கு | - | சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 10 % |
| 3. | வெற்றுக்காணிகளுக்கு | - | சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 10 % |
| 4. | வதிவிடங்களுக்கு | - | சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியில் 05 % |

இவ்வரிகளை பின்வரும் நடைமுறைகளுக்கமைவாக செலுத்தல் வேண்டும்

1. வரிக்கணிப்பீடு முழு ஆண்டு காலப்பகுதிக்குரியதாக அமையும்

2. ஆண்டுக்கான வரித்தொகையினை காலாண்டு அடிப்படையில் செலுத்தி தீர்த்துக் கொள்ள முடியும். அதற்கமைவாக காலாண்டுக்கான வரியினை பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | - | மாச்சு 31 |
| இரண்டாம் காலாண்டு | - | யூன் 30 |
| மூன்றாம் காலாண்டு | - | செத்தெம்பர் 30 |
| நான்காம் காலாண்டு | - | திசெம்பர் 31 |

3. 2024 ஆம் ஆண்டுக்காக கணிப்பிடுகின்ற ஆதனவரியின் முழுத்தொகையையும் 2024, சனவரி 31 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி முடிக்கப்படுமிடத்து, அத்தகைய வரி செலுத்துவோருக்கு 10% கழிவு வழங்கப்படும்

4. காலாண்டுக்கான வரித்தொகையின் முழுத்தொகையையும் காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்துவோருக்கு 05% கழிவு வழங்கப்படும்.

5. குறித்த நிதியாண்டிற்கான வரியினை குறித்த நிதியாண்டில் செலுத்தாவிடின் விறாந்துக்கட்டணமாக எல்லா வகையான ஆதனங்களுக்கும் 10% அறவிடப்படும்.

ஏ. ரீ. எம். றாபி,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை - அக்கரைப்பற்று.

01-377/2

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் வரிக்கட்டணங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147, 148, 149, 150(1), (2), 151, 152(1), (2) 153(1), 154(1) ஆம் பிரிவுகளின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் படி 2024 ஆம் ஆண்டின் பொருட்டு கீழ் வரும்

அட்டவணையில் விபரிக்கப்படும் உரிமக்கட்டணம், தொழில் மீதான வரி ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அறவீடு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் 2024 மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக பிரதேசசபை சட்டத்தின் பிரகாரம் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என 2023.12.29 ஆந் திகதிய 17(1) ஆம் இலக்க நிர்வாக கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | சாதாரண சாப்பாட்டுக்கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | உணவகம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | தேநீர் அல்லது கோப்பிக்கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | தேநீரும் சாப்பாடும் ஒருங்கிணைந்த கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | ரொட்டிச்சாலை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | பாண்போறணை ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | இரு பாண்போறணைகளுக்கு மேல் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | குளிர்பான விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | குளிர்பான நிலையத்தில் உபஉணவு வகை விற்றல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | பால் பதப்படுத்தல் சேமித்தல் பால், மோர், தயிர் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | பாற்பண்ணை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | வாயு அடைத்த பானம் விற்பனைக்கு களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | பழரசங்கள் பழக்கூழ் உற்பத்தி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | ஜூஸ் உற்பத்தி,விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | மென்பான உற்பத்தி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | தங்கும் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | மரக்கறி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | பழங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | மீன் சேகரிக்கும் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | கருவாடு களஞ்சியப்படுத்தல் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | கருவாடு விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | ஒரு மாட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | ஒரு ஆட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | கோழியிறைச்சி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | கோழிப்பண்ணை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | முட்டை விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I வியாபாரத்தின் தன்மை* | *நிரல் II வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 27. | நல்லெண்ணெய் உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | தேங்காய் எண்ணை உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | ஐஸ்கட்டி உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. | அரிசி மற்றும் தானியவகைகள் விற்பனை செய்தல் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. | மேலைத்தேய மருந்து விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. | கீழைத்தேய சுதேச ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. | பால்மா வகைகள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 34. | மருந்து விற்பனை நிலையத்தில் ஏனைய உபஉணவு பொருள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 35. | பல்பொருள் வாணிபம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 36. | சில்லறை விற்பனை (பெட்டிக்கடை) நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 37. | பிஸ்கட், பணிஸ் ஏனைய உற்பத்தி,விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 38. | இனிப்பு,சொக்லேட் வகைகள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 39. | தேங்காய் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 40. | குடிநீரை போத்தலில் அடைத்து விற்றல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 41. | மரக்கறிகளை துவிச்சக்கர வண்டியில் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 42. | உணவு வகைகளை தயாரித்து கடைகள் வைபவங்கள் விழாக்களுக்கு வழங்கல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 43. | பாடசாலை தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 44. | சமைத்த உணவு வகைகளை நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 45. | துவிச்சக்கர வண்டியில், மோட்டார் சைக்கிளில், தோளில் மீன் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 46. | மீன் விற்பனை நிலையம் (சில்லறை, மொத்த) ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 47. | தள்ளுவண்டி மற்றும் ஏனைய வாகனங்களில் பாண்,பணிஸ் மற்றும் ஏனைய உணவு வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 48. | கால்நடை பண்ணை ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 49. | அப்பள உற்பத்தி,விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 50. | சத்துணவு மற்றும் சிற்றுண்டிகள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 51. | தொலைபேசி அழைப்பு பெட்டிகள் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 52 | மீள் ஒலிபரப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 53. | தொலைத்தொடர்பு கோபுரம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 54. | தொலைத்தொடர்பு,தொலைநகல் சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 55. | இணையத்தள வசதிகள் (Net cafe உள்ளடங்கலாக) சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 56. | நிழற்பிரதி சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 57. | தட்டச்சு,கணினி அச்சு உறையிடுதல் (Laminating) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 58. | புகைப்பிடிப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 59. | எதிர்மறை புகைப்படங்களை அச்சிடுவதற்கான கட்டளைகளை ஏற்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 60. | புகைப்பட நிலையத்திற்கான (Studio) ஆய்வுகூடம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 61. | படங்களுக்கு சட்டமிடுதலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 62. | பரிசுப் பொருட்கள் அலங்கார பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 63. | வாத்தியக் கருவிகள் களஞ்சியப்படுத்தலும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 64. | சினிமா படமாளிகை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 65. | மினி சினிமா படமாளிகை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 66. | மண்டபங்கள்,திரையரங்குகளில் உள்நாட்டு,வெளிநாட்டு பானங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 67. | பெயர்பலகைகள் மற்றும் விளம்பர பலகைகள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 68. | பண்டிகைக் கால தற்காலிக விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 69. | நடமாடும் வெதுப்பக உற்பத்தி | 500.00 | 750.00 | 1,000.00 |
| 70. | வெற்றிலை பாக்கு விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 71. | சிகரட் முகவர் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 72. | பீடி, சுருட்டு உற்பத்தி நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 73. | புகையிலை புகைபொருட்கள் விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 74. | புகையிலை உலர்த்தும் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 75. | கள் சேகரிப்பு விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 76. | பனம் சாராயம் தயாரிக்கும் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 77. | பனம் சாராய விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 78. | மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 79. | படகுகள் தயாரிக்கும் புதுப்பிக்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 80. | உருக்கி ஒட்டும் (Welding) நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 81. | கடைச்சல் வேலைகள் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 82. | திண்மப்படிவங்களை செதுக்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 83. | தகர வேலைகள் செய்யும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 84. | இரும்புத் தொழிலகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 85. | நகைத் தொழிலகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 86. | நகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 87. | மின்கலம் மீள் மின்னேற்றும் (Battery charge) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 88. | பிரம்பு,பன்ன வேலை உற்பத்தி,விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 89. | தும்புத்தடி,ஈர்க்கு கட்டு, தும்புப்பொருட்கள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 90. | கயிறு தயாரிப்பதற்கான தும்புகள் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 91. | தூரிகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 92. | பசளை, உரவகை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 93. | பசளை, உரவகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 94. | கமத்தொழில் இரசாயனப்பொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 95. | மரக்கன்றுகள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 96. | தவிடு,புண்ணாக்கு,வைக்கோல் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 97. | மிருக,கோழித்தீன் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 98. | விலங்கு உணவுகள் களஞ்சியமும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 99. | வளர்ப்பு மீன்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 100. | அந்தியகால சேவை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 101. | சவப்பெட்டிகள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 102. | சவப்பெட்டிகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I வியாபாரத்தின் தன்மை* | *நிரல் II வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 103. | மலர்ச்சாலை ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 104. | செயற்கை மலர்கள் உற்பத்தி,விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 105. | மின்னியக்க நெல் குற்றும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 106. | மின்னியக்க அரைக்கும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 107. | மின்னியக்க உணவுப் பண்ட உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 108. | சாதாரண ஆடை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 109. | மின்னியக்க ஆடை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 110. | தையல் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 111. | தையல் நிலையம் (மின் பாவனையுள்ளது) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 112. | கைத்தறி நெசவு வேலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 113. | துணிகளுக்கு சாயம் அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 114. | தைத்த ஆடைகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 115. | புடவை (ஆண்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 116. | புடவை (பெண்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 117. | புடவை (சிறுவர்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 118. | ஏனைய புடவை துணி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 119. | புடவை மொத்த விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 120. | சப்பாத்து,செருப்பு,தோல்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 121. | சப்பாத்து,செருப்பு,தோல்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 122. | பாடசாலை பைகள்,போக்குவரத்து பைகள்,கைப்பைகள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 123. | சாதாரண அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 124. | மின்னியக்க அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 125. | கணினி அச்சுப்பதிக்கும் (Off set) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 126. | கல்லுடைக்கும் கிளறும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 127. | கையால் மரமரியும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 128. | இயந்திர மரமரியும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 129. | தச்சுத்தொழில் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 130. | அரிந்த மரங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 131. | பலகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 132. | விறகு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 133. | கட்டட அமைப்புக்கான பனைமரங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 134. | தளபாட உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 135. | தளபாட விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 136. | பெயின்ட் வாணிஸ் பூச்சுக்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 137. | ஸ்பிறே பெயின்ட் செய்யும் நிறுவனம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 138. | கண்ணாடி பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 139. | கண்ணாடி பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 140. | அலுமினிய பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 141. | அலுமினிய பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 142. | அலுமினிய கதவுகள், யன்னல்கள், காட்சிப்பெட்டிகள் பொருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 143. | துருப்பிடிக்காத உலோகப்பொருட்கள் (Ever silver) உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 144. | துருப்பிடிக்காத உலோகப்பொருட்கள் (Ever silver)விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 145. | விளையாட்டுப்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 146. | விளையாட்டுப்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 147. | மின்சாரப்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 148. | மின்சாரப்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 149. | பண்டிகைக் கால வெடிபொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 150. | பண்டிகைக் கால வெடிபொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 151. | சவர்க்கார பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 152. | சவர்க்கார பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 153. | சலவை நிலையம் (Laundry) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 154. | மெத்தை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 155. | மெத்தை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 156. | தேங்காய் சிரட்டை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 157. | சுண்ணாம்பு சூளை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 158. | சிப்பி,சுண்ணாம்பு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 159. | அழகூட்டும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 160. | சிகை அலங்காரம், முடிவெட்டும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 161. | உடற்பயிற்சிக் கூடம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 162. | வெற்றுப்போத்தல்,சாக்கு,பழைய கடதாசி பழைய இரும்பு சேகரித்தல், விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 163. | நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 164. | நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 165. | தையல் இயந்திரம் திருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 166. | எரிபொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 167. | பெற்றோல் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 168. | டீசல் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 169. | மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 170. | மண்ணெண்ணெய் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 171. | உராய்வு எண்ணெய்,கிறீஸ் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 172. | உராய்வு எண்ணெய்,கிறீஸ் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 173. | கனிய எண்ணெய், தார் களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 174. | சமையலறை வாயு களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 175. | அமிலப்படுத்திய வாயுக்களடங்கிய சிலிண்டர்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 176. | கூட்டுறவுச் சங்க கிளை - எரிபொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 177. | விழாக்களுக்கான மண்டபம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 178. | இளைப்பாறும் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 179. | விருந்தினர் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 180. | பொது விளம்பர சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 181. | வெளிநாட்டு முகவர் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 182. | முகவர் தபால் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 183. | கட்டிட நிர்மாண ஒப்பந்த நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 184. | கூட்டுறவுச் சங்க கிளை - பல்பொருள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 185. | புதினப்பத்திரிகை,சஞ்சிகைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 186. | தொலைக்காட்சிப்பெட்டி வானொலிப்பெட்டி திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 187. | மணிக்கூடுகள்,கைக்கடிகாரங்கள் திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 188. | மின்பொருள் திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 189. | பிளாஸ்டிக்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 190. | பழைய கட்டிட பொருட்கள் சேகரித்து விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 191 | துவிச்சக்கரவண்டி திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 192. | பனை வெல்லம் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 193. | நண்டு வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 194. | இறால் வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 195. | கடல் பாசி வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 196. | கூட்டுறவு பல்பொருள் களஞ்சியசாலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 197. | கடலட்டை வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**உற்சவகால தற்காலிக விசேட உரிமக் கட்டணம்**

| வியாபாரத்தின் தன்மை | தொகை |
|---|---|
| சிறிய வியாபாரம் | 250.00 |
| ஐஸ்கிறீம் கடை | 1000.00 |
| ஐஸ்கிறீம் வான் | 750.00 |
| கச்சான் கடை | 250.00 |
| உலோகப்பொருள் விற்பனைக்கடை | 1000.00 |
| அழகுசாதனப்பொருள் விற்பனைக்கடை | 1000.00 |
| உணவகம் | 1000.00 |
| தள்ளுவண்டில் வியாபாரம் | 500.00 |
| துவிச்சக்கரவண்டில் வியாபாரம் | 200.00 |

01 - 453/1

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்*

*147 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவின் நியதிகளின் படி வாகனம் மற்றும் மிருகங்களுக்கான வரி மேற்கூறப்பட்ட சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையில் உள்ள வீத வரிகளுக்கு அமைவாக விதிக்கப்பட்ட*

2023 ஆம் ஆண்டில் அறவீடு செய்யப்பட்ட அத்தகைய வரி முறை மூலமாகவே 2024 ஆம் ஆண்டிலும் தொடரப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி 148(3) பிரிவின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17(II) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

| இல. | விபரம் | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | மோட்டார் கார்,மோட்டார் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், கார் ரிக்ஷோ துவிச்சக்கர வண்டி தவிர்ந்த ஒவ்வொரு வாகனங்களுக்கும் | 25.00 |
| 2. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி அல்லது முச்சக்கர வண்டி அல்லது துவிச்சக்கர கார் அல்லது வண்டிக்கு | |
| | (அ) வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தல் | 18.00 |
| | (ஆ) வர்த்தக நோக்கங்கள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டால் | 4.00 |
| 3. | ஒவ்வொரு வண்டிக்கும் | 20.00 |
| 4. | ஒவ்வொரு கை வண்டிக்கும் | 10.00 |
| 5. | ஒவ்வொரு ரிக்ஷோ வண்டிக்கும் | 7.50 |
| 6. | ஒவ்வொரு குதிரை அல்லது மட்டக்குதிரை அல்லது கோவேறு கழுதைக்கும் | 15.00 |
| 7. | ஒவ்வொரு யானைக்கும் | 50.00 |
| 8. | ஒவ்வொரு நாய்க்கும் | 7.00 |

இருபத்தாறு அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சில்லுகளை கொண்ட பிள்ளைகளின் வண்டிகள் தள்ளு வண்டிகள் தனியார் வளவில் மாத்திரம் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாத கைவண்டிகள் என்பன கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன.

இவ் அட்டவணையில் ''வியாபார நோக்கங்கள்'' என்பது ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்துடன் தொடர்புடையதாக விற்பனைக்கோ அல்லது வேறெதற்காகவோ எவையேனும் பொருட்களை அல்லது பண்டங்களை அல்லது ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட பொருட்களை கொண்டு செல்லுதல் அல்லது ஏற்றுதலை உள்ளடக்கும்.

01 - 453/2

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்

152(1) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152(1) ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்ட தொழில்கள், உயர்தொழில்கள் மீது விதிக்கப்பட்ட இந்தவரி வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வரவுகளுக்கு ஏற்புடையதாக கீழ்க் குறிப்பிடப்படும் தொகைகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் இதில் குறிப்பிட்ட தொழில் முயற்சிகள் மேற்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் முந்திய ஆண்டின் அத்தொழிலை நடாத்தியதற்கான கீழ்க்காணும் ஆவண ரீதியான ஆதாரங்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம், கீழே தரப்பட்ட அட்டவணையின் படி குறித்தவரி அறவீடு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் 2024 மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக பிரதேச

சபை சட்டத்தின் பிரகாரம் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என 2023.12.29 ஆந் திகதிய 17 (III) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**ஆவண ரீதியான ஆதாரங்கள் பின்வருமாறு :**

1.முந்திய ஆண்டின் தொழிலுக்கான வருமான அறிக்கை இறுதிக் கணக்கறிக்கை பிரதி ஒன்று
2.முந்திய ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வருமான வரி செலுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய பிரதி ஒன்று

**அட்டவணை**

| இல. | வருடாந்த புரள்வு | தொகை |
|---|---|---|
| 1. | 6,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | இல்லை |
| 2. | 6,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 12,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 90.00 |
| 3. | 12,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 18,750 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 180.00 |
| 4. | 18,750 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 75,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 360.00 |
| 5. | 75,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 150,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1200.00 |
| 6. | 150,000 ரூபாவுக்கு மேற்பட்ட போது | 3000.00 |
| 7. | நிதி நிறுவனம்/வங்கி/கிராமிய வங்கி/சமுர்த்தி வங்கி (ஆகக் கூடியது) | 3000.00 |

**தொழில் முயற்சிகள் பின்வருமாறு:**

1. தரகு முகவர்கள்
2. ஏல விற்பனையாளர்கள்
3. பணம் கடனுக்கு வழங்குபவர்களின் வியாபாரமொன்றை நடாத்தல்
4. அடகுப் பொருட்களை பெறும் வியாபாரமொன்றை நடாத்துதல்
5. ஒப்பந்தக்காரராக தொழில் நடாத்துதல்
6. கிணறு,குழாய்க் கிணறு தோண்டும் தொழில் நடாத்துதல்
7. மின்சார தொழில் நுட்பவியலாளராக தொழில் நடாத்துதல்
8. உத்தரவு பெற்ற தனியார் நில அளவையாளராக தொழில் நடாத்துதல்
9. கட்டட வரைபட வரைஞராக தொழில் நடாத்துதல்
10. சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசாக தொழில் நடாத்துதல்
11. வழங்குநர்கள்
12. போக்குவரத்து தொழில் நடாத்துதல்
13. சாரதி பயிற்சி நிறுவனமொன்றை நடத்துதல்
14. வங்கி நிதிக்கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளை நடாத்தல்
15. தனியார் கல்வி நிறுவனமொன்றை நடாத்தல்
16. தனியார் பாதுகாப்பு சேவை நடாத்துதல்.
17. வேலைவாய்ப்பு முகவர் வியாபாரமொன்றை நடத்தல் (உள்நாடு/வெளிநாடு)
18. நிபுணத்துவ வைத்திய சேவையொன்றினை நடாத்துதல்
19. ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வியாபாரமொன்றை நடாத்துதல்
20. மருந்துகள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல்
21. தனியார் மருத்துவ நிலையம் நடத்துதல்
22. தனியார் வைத்திய சேவையாளராக தொழில் நடாத்துதல்
23. விழாப்பொருட்கள் வழங்கும் இடமொன்றை நடாத்துதல்

24. வரவேற்பு மண்டபமொன்றை நடாத்துதல்
25. வீட்டு வரைபடங்களை வரையும் நிறுவனமொன்றை நடாத்துதல்
26. லொத்தர் சீட்டுக்கள் விற்பனை இடமொன்றை நடாத்துதல்
27. அதிஷ்டலாப சீட்டு(லொத்தர்) முகவராக தொழில் நடாத்துதல்
28. வாகனங்களில் நடமாடும் வியாபாரம் நடாத்துதல்
29. தொலைத்தொடர்பு நிலையங்களுக்கான கோபுர நிலையங்கள் நடாத்துதல்
30. தொலைபேசி நிலையங்கள் நடாத்துதல்
31. கட்டட நிர்மாணங்களுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இயந்திர சாதனங்கள் வாடகைக்கு விடும் தொழில் நடாத்துதல்.
32. அலுமினிய கதவுகள், யன்னல்கள், காட்சிப்பெட்டிகள் பொருத்தும் தொழில் நடாத்துதல்
33. மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடும் தொழில் நடாத்துதல்
34. உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் தொழில் நடாத்துதல்
35. படகுகள் தயாரிப்பதற்கான தொழில் நிலையம் நடாத்துதல்
36. கள் உற்பத்தி விற்பனை நிலையம்/மதுபான உற்பத்திச்சாலை நடாத்துல்
37. அரச அங்கீகாரம் பெற்ற மொத்த மதுசாரம் சேகரிக்கும் மற்றும் விற்பனை நிலையம் நடாத்துதல்
38. கட்டடம் சுத்தம் செய்பவராக தொழில் நிலையம் நடாத்துதல்
39. வெளிநாட்டு நாணயங்கள் மாற்றுவதற்கான நிலையம் ஒன்றை நடாத்துதல்
40. தனியார் நெசவுசாலை/இயந்திரம் மூலம் புடவை உற்பத்தி நிலையம் நடாத்துதல்
41. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல்
42. உராய்வு நீக்கிகள் களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்யும் நிலையம்
43. குளிர்களி மற்றும் அதனோடு தொடர்புபட்ட உற்பத்திகள் நிலையம் நடாத்துதல்
44. வெதுப்பக உற்பத்தி மற்றும் அதனோடு தொடர்பு பட்ட உற்பத்திகள் நிலையம் நடாத்துதல்
45. இரும்பு மரத்தளபாட உற்பத்தி விற்பனை நிலையம் நடாத்துதல்
46. வாகனம் பழுதுபார்த்தல் சுத்திகரிப்பு நிலையம் நடாத்துதல்
47. அரிசி ஆலை ஒன்றை நடாத்துதல்
48. கல்லுடைக்கும் ஆலை ஒன்றை நடாத்துதல்
49. குடிநீர் நிரப்பும் நிலையமொன்றினை நடாத்துதல் மற்றும் விற்பனை செய்தல்
50. சிறப்புக் கடைத்தொகுதிகளை நடாத்துதல்
51. ஆடைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்
52. முகவர் தபாலகமொன்றை நடாத்துதல்
53. விற்பனைக் காட்சியறையொன்றினை நடாத்துதல்
54. ஏதேனும் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஒருவராக செயற்படுதல்
55. ஏதேனும் ஒரு பொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
56. காஸ் மொத்த விற்பனை நிலையம் நடாத்துதல்
57. தனியார் கணக்காளர் சேவை
58. அச்சகமொன்றை நடாத்துதல்

01 - 453/3

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்*

*154 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய காணி தொடர்பாக விதிக்கப்படும் வரி*

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இருக்கும் யாதாயினும் காணி ஒன்று பகிரங்க ஏல விற்பனை மூலமாகவோ, வேறு வகையிலோ ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலமாக விற்கப்படுகின்றவிடத்து விற்பனையாளர் அல்லது அத்தகைய ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் அத்தகைய காணி விற்பனையின் விற்று வரவுகளிலிருந்து அத்தகைய விற்றுவரவுத் தொகையின் ஒரு சதவீதத்திற்கு சமமானவொரு வரியை சபைக்கு செலுத்த வேண்டும்*

என்றும் இதனை 01.01.2022 ஆந் திகதி முதல் செலுத்தப்பட வேண்டும் என்றும் 2023.12.29 ஆம் திகதிய 17 (IV) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

01 - 453/4

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேசசபையினால் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழற் சட்டம் 23 அ என்னும் பிரிவின் கீழான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1533/16 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் 1534/18 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக 'இ' பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எமது சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள்,கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், ஒன்றுக்கான உத்தரவுப்பத்திர கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து அறவிடப்படல் வேண்டும் என்பதுடன் இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும். இக் கட்டணங்கள் 01.01.2024 ஆந் திகதி முதல் தொடரப்பட வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17(V) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

1. எல்லா வாகன எரிபொருள் நிரப்பு நிலையங்களும் (திரவப் பெற்றோலியம் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு உட்பட)
2. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி
3. பத்துக்கு மேற்பட்டவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்
4. பத்துக்கு மேற்பட்டவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பான வகைகள்
5. உலர் பதனீட்டு முறைத் தொழிற்பாடுகளையுடைய அரிசி ஆலை
6. ஒரு மாதத்திற்கு 1000 கிலோகிராமிலும் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்
7. புகையிலைக் களஞ்சியங்கள்
8. தொகுதியொன்றுக்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட கந்தகத்தூமமூட்டும் கொள்ளளவுடைய கறுவா தூமமூட்டும் கைத்தொழில்கள்

9. உணவுக்கு பயன்படுத்தப்படும் உப்பு சிப்பஞ் செய்தல், பதனிடுதல் கைத்தொழில்கள்
10. தேயிலைத் தொழிற்சாலைகள்
11. கொங்கிறீட் முன்வார்ப்புகள் கைத்தொழில்கள்
12. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்து குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள்.
13. நாளொன்றுக்கு 20 மெற்றிக் தொன்னுக்குக் குறைவான உற்பத்தித் திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்
14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்து கைத்தொழில்கள்
15. எல்லா விதமான சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள்
16. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள்
17. வெடிமருந்துகளைப் பயன்படுத்தும் கம்மியர் சுரங்கத் தொழில் நடவடிக்கைகளுடனான ஒற்றைத்துளை தகர்ப்புகள்
18. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான அரிக்கும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரோன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள்
19. ஐந்துக்குக் கூடுதலான 25 இற்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பலநோக்குத் தச்சுப் பொறிகளை பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மரவேலைக்களங்கள்
20. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 இற்குக் குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வாடி வீடுகள்
21. வாகனங்களைப் பழுது பார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமரித்தல் செயற்பாடுகளையுடைய கராஜ்கள்
22. குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுதுபார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்து பொருத்துதல் உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைக் களங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச்சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள்பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட
23. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள்
24. பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லாவிதமான மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல்
25. ஈயம் உருக்குதல் புறநீங்கலாக அச்சுக்கூடங்களும் எழுத்தச்சுப் பொறிகளும்

**பரீட்சித்தல் கட்டண விபரம்**

| | முதலீடு | ரூபா.சதம் |
|---|---|---|
| 1. | 250,000.00 அல்லது அதற்கு குறைந்த தொகை | 3472.22 |
| 2. | 250,001.00 - 500,000.00 | 4305.56 |
| 3. | 500,001.00 - 1,000,000.00 | 5740.74 |
| 4. | 1,000,001.00 க்கு கூடுதலானது | 11,527.78 |
| 5. | 10,000,00.00 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை | 23,009.26 |

சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான கட்டணம் ரூபா 4,500.00 அறவிடப்படுகிறது. வழங்கப்படும் உரிமம் மூன்று வருடத்திற்கானது ஆகும்.

01 - 453/5

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

களியாட்ட வரி சட்டத்தின் கீழ் வரி அறவிடுதல்

களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2 இல் உள்ள உப பிரிவு 1 நியதிகளின் படி திரைப்படக்காட்சி, வித்தைக் காட்சி, மாயாஜால காட்சி, நாடக செயலாற்றுகை காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சிக்காட்சி ஆகியவற்றுக்கு அச்சிடப்படும் நுழைவுச்சீட்டு களியாட்ட வரியாக கீழே குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவு பத்திரக்கட்டணம் பொது செயலாற்றுகை கட்டளை சட்டத்தின் அத்தியாயம் 176 இலுள்ள பிரிவு

நியதிகளின் படி செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென 2021.12.29 ஆந் திகதிய 17(VI) ஆம் இலக்க நிர்வாக கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

| விபரம் | கட்டணம் ரூபா சதம் |
|---|---|
| 01. சங்கீத இசை நிகழ்ச்சி,நாடக செயலாற்றுகை திரைப்படக்காட்சி, வித்தைக் காட்சி,மாயாஜாலக் காட்சி நாள் ஒன்றுக்கு | 100.00 |
| 02. சங்கீத இசை நிகழ்ச்சி,நாடக செயலாற்றுகை திரைப்படக்காட்சி, வித்தைக் காட்சி,மாயாஜாலக் காட்சி மேலதிக ஒவ்வொரு நாளுக்கும் | 25.00 |
| 03. நாடக செயலாற்றுகையின் பொருட்டு நாள் ஒவ்வொன்றிற்கும் | 250.00 |
| மேலும் மேற்குறித்த நிகழ்வுகளுக்குரிய பற்றுச்சீட்டுகளுக்கு கட்டணம் அறவிடப்படும் போது பற்றுச்சீட்டின் 5% கட்டணமாக அறவிடப்படும் | |

01 - 453/6

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

கட்டடம் அமைத்தலுக்கான அனுமதியும் கட்டணங்கள் விதித்தலும் - 2024

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன், சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (அதிகாரம் 600) நடைமுறைகளுக்கமைவாகவும் சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் அனுமதியும் பரிசோதனையின் சார்பிலும், முன் அனுமதி பெறப்படாமல் அங்கீகாரம் கோரி கட்டப்படும் கட்டடங்களுக்காகவும், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் திருத்தப்பட்ட கட்டண விபரங்களுக்கமைவாக 2024.01.01 இல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என 2023.12.29 ஆந் திகதிய 17(VII) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை - 01**

பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். அனுமதிக்கப்பட்ட விளம்பர பலகைகளுக்கு அறவிடப்படும் கட்டண விபரங்கள் பின்வருமாறு :

| தொ. இல. | விபரம் | கட்டணம் |
|---|---|---|
| 1. | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம், பிலெக்ஸ், லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | 100.00 |
| 2. | ஒரு மாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 30.00 |
| 3. | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்குக் குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 20.00 |
| 4. | கட் அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | 40.00 |
| 5. | கட் அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | 30.00 |
| 6. | வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய பெயர்ப்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | 100.00 |
| 7. | டிஜிட்டல் பெயர்ப்பலகை | 150.00 |
| 8. | ஒளிபுகக்கூடிய விளம்பரம் | 150.00 |

**அட்டவணை - 02**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49(அ) பிரிவுக்கமைய பிரதேச சபையின் எல்லைக்குள் ஏதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை அல்லது வாசலை பிரதேச சபையின் அனுமதி இல்லாமல் அமைக்கக் கூடாது.*

* ஊர்காவற்றுறை பிரதேச சபையின் வீதி ஒன்றின் அகலம் 26 அடி (வீதியின் மத்தியில் இருந்து 13 அடி) ஆகவும் வரையறுக்கப்படுவதுடன் வீதி அகலிப்பின் போது நட்டஈடு எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது என வளவுகளின் உரிமையாளர்கள் பொறுப்பேற்பு ஒன்றை எழுதி நிறைவேற்றும் போது பின்வரும் ஆதனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எல்லைச் சுவர் அமைப்பது தொடர்பான கட்டட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

| ஆதனங்களின் எண்ணிக்கை (ஆகக்கூடியது) | தெருவின் ஆகக்குறைந்த அகலம் |
|---|---|
| 0-4 | 10 அடி (வீதியின் மத்தியில் இருந்து 5 அடி) |
| 5-8 | 15 அடி (வீதியின் மத்தியில் இருந்து 7.5 அடி) |
| 9-20 | 20 அடி (வீதியின் மத்தியில் இருந்து 10 அடி) |

*குறிப்பு :* எல்லைச்சுவர் தொடர்பான கட்டட விண்ணப்பத்தை பரிசீலிக்கும் போது சபையின் ஆதனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எல்லைச் சுவர் அமைய வேண்டிய எல்லையை விட ஏற்கனவே அமைக்கப்பட்ட எல்லைச்சுவர் ஒன்று கூடிய எல்லையை கொண்டிருக்குமாயின் அதுவே கவனத்தில் கொள்ளப்படும்.

* கட்டடங்கள் வீதியின் மத்தியில் இருந்து 20 அடிக்கு அப்பால் அமைக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை - 03**

உயிர் வேலி அழித்தல் ஒரு அடி நீளத்திற்கு - 20.00

01 - 453/7

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுக்கு உட்பட்ட வகையில் ஊர்காவற்றுறை பிரதேச எல்லைக்குள் ஏதாவது வீதி அல்லது அத்தகையை வீதியை சூழவுள்ள எல்லை மீது வீதி தவறிச் செல்லும் கால்நடைகள், ஆடுகள் போன்ற மிருகங்களிலிருந்து பொதுமக்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படுகின்ற சேதங்களை தடுக்கும் பொருட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வறிவித்தல் வர்த்தமானி பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து அறவீடுகள் விதிக்கப்படல் வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17(VIII) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

| விபரம் | தொகை |
|---|---|
| கால்நடைகளை (மாடு) பிடிப்பதற்கான விதிப்பனவு (தலை ஒன்றிற்கு) | - ரூபா 1,500.00 |
| கால்நடைகளுக்கான(மாடு) தண்டம் (தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| கால்நடைகளை (மாடு) பாதுகாத்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு (தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| கால்நடைகளை(மாடு)பராமரித்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு (தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| ஆடுகளை பிடிப்பதற்கான விதிப்பனவு(தலை ஒன்றிற்கு) | - ரூபா 1,000.00 |
| ஆடுகளுக்கான தண்டம் (தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| ஆடுகளை பாதுகாத்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு | - ரூபா 200.00 |
| ஆடுகளை பராமரித்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு | - ரூபா 300.00 |

01 - 453/8

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

கொண்டு திரிந்து விற்கும் (நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமை) வியாபாரம் செய்யும்
வியாபாரிகளுக்கு வரி விதித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1998.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சி - பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணை விதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைப்படி 01.01.2024 ஆம் திகதியிலிருந்து அறவீடுகள் விதிக்கப்பட வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17 (IX) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

| | ரூபா.ச |
|---|---|
| 1. துவிச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 50.00 |
| மீன் விற்பனை நடமாடும் வாகனம் (1 நாளுக்கு) | 100.00 |
| 2. மோட்டார் சைக்கிளில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 100.00 |
| 3. முச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 100.00 |
| 4. மோட்டார் வாகனத்தில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 200.00 |
| 5. தயாரிக்கப்பட்ட உணவுவகை நடமாடும் வாகனத்தில்/துவிச்சக்கரவண்டியில் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 50.00 |

01 - 453/9

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

சபையின் தண்ணீர்க் கட்டணம், தண்ணீர் தாங்கி வாடகைக்கு விடல் கட்டணம்

01.01.2024 ஆந் திகதி முதல் தண்ணீர்த்தாங்கி வாடகைக்கு விடல், தண்ணீர் விநியோகத்தின் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17(X) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

| விபரம் | தொகை |
|---|---|
| 1000 லீற்றர் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான கட்டணம் பொதுமக்கள் பாவனைக்கு | ரூபா 1,600.00 |
| 1000 லீற்றர் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான கட்டணம் பாடசாலை மாணவர்களின் குடிநீர் பாவனைக்கு | ரூபா 1,200.00 |
| 1000 லீற்றர் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான கட்டணம் ஏனைய பாவனைக்கு | ரூபா 2,000.00 |
| தண்ணீர் தாங்கி - நிறுத்தியுடன் (நாள் ஒன்றுக்கு) | ரூபா 1,000.00 |

01 - 453/10

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

உப பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணிகளின் வரைபடங்களை அங்கீகரித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் காணிகளை உபபிரிவுகளாகப் பிரிக்கும்போது அதற்கான உபபிரிவுகளின் வரைபடங்களை அங்கீகரிப்பதற்கு காணி உறுதிப்பத்திரத்தையும் அதன் வரைபடமும் காட்டப்படும் காணியின் அளவுப்படி ஒருபரப்பு நிலத்திற்கு ரூபா 100 கட்டணத் தொகையை இவ்வறிவித்தல் வர்த்தமானி பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து அறவீடு செய்வதென 2021.12.29 ஆந் திகதிய 17 (XI) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

01 - 453/11

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு கட்டணம் அறவிடல்

01.01.2024 ஆந் திகதி முதல் விளைவுறும் வண்ணம் கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு கட்டணம் பின்வருமாறு அறவீடு செய்வதென 2021.12.29 ஆந் திகதிய 17(xii) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | கிரவல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150.00 |
| 2. | மணல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150.00 |
| 3. | கல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150.00 |
| 4. | சல்லி (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150.00 |

01 - 453/12

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

மிருகவதைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272 )17 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17(2) ஆம் பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி,

குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் திகதிகளிலும், தவிசாளரால் அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17 (XIII) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திரதினம்
2. மகாசிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள் )
4. உலக மிருகதினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

01 - 453/13

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்களுக்கான கட்டணம் அறவிடுதல்

01.01.2024 ஆந் திகதி முதல் சபைக்கு சொந்தமான பின்வரும் வகையுடைய வாகனங்களின் வாடகை தொடர்பில் மாவட்ட விலை நிர்ணய குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நாள் ஒன்றிற்கான கட்டண அடிப்படையிலேயே அறவிடப்படும் என 2023.12.29 ஆந் திகதிய 17 (xiv) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை 1**

| இல. | விபரம் | ரூ.ச. |
|---|---|---|
| 1. | வீதி உருளை (ரோலர்) - (நாள் ஒன்றிற்கு) - 4 மணித்தியாலம் | 18,400.00 |
| 2. | உழவு இயந்திரம் (பெட்டியுடன்) (மணித்தியாலம் ஒன்றிற்கு) | 1400.00 |
| 3. | இருசக்கர உழவு இயந்திரம் (பெட்டியுடன்) (மணித்தியாலம் ஒன்றிற்கு) | 1200.00 |
| 4. | நீர் இறைக்கும் இயந்திரம் வாடகை (எரிபொருள் இன்றி) (நாள் ஒன்றிற்கு) | 2,000.00 |
| 5. | மாட்டு உருளை - தனிநாள் ஒன்றிற்கு | 2,000.00 |
| 6. | மாட்டு உருளை - உழவு இயந்திரத்துடன் (மணித்தியாலம் ஒன்றிற்கு) | 1,650.00 |

வீதி புனரமைப்பு வேலைக்கு முழுமையாக மேற்குறித்த வீதி உருளையை பயன்படுத்தும் போது முதல் தாரிடுகையின் பின் மறுநாள் உருளையிடல் வேலைக்குக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

| இல. | விபரம் | ரூ.ச. |
|---|---|---|
| 1. | ஜேசிபி வாகனம் - மணித்தியாலத்திற்கு (மானி வாசிப்பின் பிரகாரம்) | 6,500.00 |
| 2. | ஹன்ரர் முதல் பத்து கிலோ மீற்றர்களுக்கும் | 1,600.00 |
| | மேலதிக ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் | 120.00 |

*குறிப்பு.* - ஜே. சி. பி. வாகனமானது 03 மணித்தியாலத்திற்குட்பட்ட வேலைக்குச் செல்லும் போது, அலுவலகத்திலிருந்து வேலைத்தளத்திற்கு செல்வதற்கான மற்றும் வேலைத்தளத்திலிருந்து அலுவலகத்திற்கு வரும்வரையிலான கட்டணமும் உள்ளடங்கலாக அறவிடப்படும். 03 மணித்தியாலத்திற்கு மேலதிகமான வேலைக்குச் செல்லும் போது, அலுவலகத்திலிருந்து வேலைத்தளத்திற்கு செல்வதற்கான கட்டணத்துடன் அறவீடு மேற்கொள்ளப்படும்.

01 - 453/14

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

இடங்கள் வரையறை செய்தல் - 2022

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 02.02.2016 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள 07.07.2017 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் ஊர்காவற்றுறை பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுச்சந்தைகள் தொடர்பான அறிவித்தலில் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு பொருத்தமாக சபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் மரக்கறி, மீன் சந்தைகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதால் சந்தைகளில் இருந்து 1/2 Km சுற்று வட்டாரப்பகுதியில் மரக்கறி,மீன், கோழி மற்றும் கடலுணவு விற்பனை செய்வதற்கு தடைசெய்தல் என 2023.12.29 ஆந் திகதிய 17 (XV) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

* ஊர்காவற்றுறை மரக்கறிச்சந்தை மற்றும் உழவர் சந்தை(சைக்கிள் பாதுகாப்பு நிலையம் உட்பட)
* ஊர்காவற்றுறை மீன் சந்தை
* நாரந்தனை மீன் சந்தை
* புளியங்கூடல் மரக்கறிச்சந்தை
* புளியங்கூடல் மீன் சந்தை
* தம்பாட்டிச் சந்தை

01 - 453/15

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)

ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4 ஆம் பிரிவின்படி 2024 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணம், அவைகள் ஆண் நாய்களோ, பெண் நாய்களோ எதுவாக இருப்பினும்

நாய் ஒன்றிற்கு ரூபா 12.00 ஆக விதிப்பதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XVI) ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

01 - 453/16

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

ஆதன வரி விதித்து அறவிடல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1),(2),(3) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள் இவ் ஆண்டில் அப்பிரதேசங்கள் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு 2024 ஆம் ஆண்டில் இருந்து ஆதனவரி அறவிடுவதற்கான முன்னாயத்த வேலைகளை மேற்கொண்டு ஆதன வரியை அறவிடுவதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XVII) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

| | |
|---|---|
| * அனலைதீவு வடக்கு | - J/37 |
| * அனலைதீவு தெற்கு | - J/38 |
| * எழுவைதீவு | - J/39 |
| * பருத்தியடைப்பு | - J/50 |
| * கரம்பொன் | - J/51 |
| * கரம்பொன் கிழக்கு | - J/52 |
| * கரம்பொன் தென்கிழக்கு | - J/53 |
| * கரம்பொன் மேற்கு | - J/54 |
| * நாரந்தனை வடக்கு | - J/55 |
| * நாரந்தனை வடமேற்கு | - J/56 |
| * நாரந்தனை | - J/57 |
| * நாரந்தனை தெற்கு | - J/58 |
| * சுருவில் | - J/59 |
| * புளியங்கூடல் | - J/60 |

01 - 453/17

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சட்டம் (126 ஆம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 520/7 ஆம் இலக்க 23.08.1988 ஆந் திகதிய நியமனத் துணைவிதியின் 9 ஆம் பிரிவினை ஏற்று கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சேவை வழங்கப்படுகின்ற ஏழ்மை காரணமாக பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய துப்பரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என்பதற்கு இணங்க குப்பை அகற்றப்படும் இடம் ஒன்றிற்கு கீழ் வருமாறு கட்டணமாக அறவிடுவது என 2023.12.29 ஆந் திகதிய 17 (XVIII) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*அழகேசன் பிரதீபன்,*
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2024, சனவரி 10.*

**அட்டவணை**

| இல. | விபரம் | கட்டணம் (ரூ.ச.) |
|---|---|---|
| 1. | வசிப்பிட பாவனைக்கான இடம் (குடியிருப்பு) (உரைப்பை ஒன்று) | மாதம் ரூபா 400.00 (வாரத்தில் ஒரு முறை) |
| 2. | ஏனைய பாவனைக்கான இடம் (அரச/தனியார் நிறுவனம்) (உரைப்பை ஒன்று) | மாதம் ரூபா 1,000.00 (வாரத்தில் ஆகக் கூடியது இரண்டு தடவை) |
| 3. | உணவகம் | ரூபா 1,500.00 ஒவ்வொரு நாளும் |
| 4. | விசேட கோரிக்கையின் பேரில் உழவு இயந்திரத்தால் உழவு இயந்திர பெட்டி மூலம் கழிவு அகற்றுதல் ஒரு தடவைக்கு (ஒரு லோட்) | ரூபா 2,500.00 |
| 5. | விசேட கோரிக்கையின் பேரில் உழவு இயந்திரத்தால் உழவு இயந்திரப் பெட்டி மூலம் அகற்றுதல் ஒரு தடவைக்கு (ஒரு லோட்) ஏற்றுக் கூலியுடன் | ரூபா 4,000.00 |
| 6. | தொழில் சார்ந்த கழிவு ஒரு தடவை | ரூபா 2,000.00 ஒவ்வொரு நாளும் |

*01 - 453/18*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

பொது விளையாட்டு மைதானத்தை பாவிப்பதற்கான கட்டணம் அறவிடுதல் - 2022

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 02.02.2016 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள 07.07.2017 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது விளையாட்டு மைதானங்கள் பற்றியஅறிவித்தல் தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்திற்கான கட்டணமாக நாளொன்றுக்கு (எட்டு மணித்தியாலம்) ரூபா 1,000 உம் மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா 100.00 வீதமும் 01.01.2024 ஆந் திகதி முதல் விதித்து அறவிடுவதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XIX) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*அழகேசன் பிரதீபன்,*
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2024, சனவரி 10.*

*01 - 453/19*

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள்

*01.01.2024 ஆந் திகதி முதல் ஏனைய சேவைகளுக்காக பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XX) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*அழகேசன் பிரதீபன்,*
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2024, சனவரி 10.*

| **விபரம்** | **கட்டணம் ரூபா சதம்** |
|---|---|
| *ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கினை நாளொன்றுக்கு வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான கட்டணம் (24 மணித்தியாலம்) மின் கட்டணமாக நிலையான கட்டணம் ரூபா 1000.00 உடன் பயன்படுத்தப்பட்ட அலகுக்கான செலவினமும் அறவிடப்படும்.* | *1000.00* |
| *வீதிக்கு குறுக்காக கொட்டகை அமைத்தல் (10X10) நாள் ஒன்றிற்கு* | *100.00* |
| *மரக்கறி சந்தையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான நாளொன்றுக்கான இடவாடகை (4X9 அடி)* | *70.00* |
| *மீன் சந்தையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான நாளொன்றுக்கான இடவாடகை (6X2 அடி)* | *70.00* |
| *அனுமதிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைக்காக சந்தை வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிலத்திற்கான வாடகை (10X10 அடி)* | *100.00* |
| *மீன் சந்தையில் மீன்வெட்டும் இடம் (4X3 அடி)* | *30.00* |

*01 - 453/20*

---

**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

நீர் விநியோக குழாய் பொருத்துவதற்காக வீதியை வெட்டுவதற்கான கட்டணம் அறவிடல்

*01.01.2024 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் நீர் விநியோகக் குழாய் பொருத்துவதற்காக பிரதேச சபையின் அனுமதியை பெற்று வீதியை வெட்டும் போது பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதுடன் குறித்த பயனாளியே குறித்த வீதியை ஒரு மாத காலத்திற்குள் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் கொங்கிறீட் இட்டு செப்பனிட வேண்டும் என 2023.12.29 ஆந் திகதிய 17 (XXI) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*அழகேசன் பிரதீபன்,*
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2024, சனவரி 10.*

**அட்டவணை**

| விபரம் | கட்டணம் ரூபா சதம் |
|---|---|
| * வீதியின் நடைபாதை ஓரம் குழி வெட்டுதல் | 300.00 |
| * வீதியின் புயத்துக்கு அப்பால் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 50.00 |
| * வீதியின் புயத்தில் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 100.00 |
| * நல்ல நிலையிலுள்ள/5 வருடத்திற்குள் புதிதாக புனரமைக்கப்பட்ட வீதியின் குறுக்காக குழிவெட்டுதல் | 12,000.00 |
| * பழுதடைந்த நிலையிலுள்ள வீதியின் குறுக்காக குழிவெட்டுதல் | 6,000.00 |

காப்பெற் வீதிக்கு குறுக்காக வெட்டுவதற்கு அனுமதி இல்லை

01 - 453/21

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

சான்றிதழ்களுக்கும் படிவங்களுக்கும் கட்டணம் விதித்தல்

01.01.2024 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் சான்றிதழ்கள், படிவங்கள் பொருட்டு பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XXII) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அழகேசன் பிரதீபன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2024, சனவரி 10.

**அட்டவணை**

| விபரம் | கட்டணம் ரூபா. சதம் |
|---|---|
| 1. காணிப்பெயர் மாற்றுப்படிவக் கட்டணம் (ஒன்று) | 400.00 |
| 2. காணிப்பெயர் மாற்றுப்படிவம் பரிசீலனைக் கட்டணம் | 500.00 |
| 3. கட்டிட விண்ணப்பப்படிவக் கட்டணம் | 500.00 |
| 4. குடியமர்வுச் சான்றிதழ் கட்டணம் (C.O.C) | 500.00 |
| 5. ஆதன உரிமச் சான்றிதழ் கட்டணம் | 500.00 |
| 6. ஆதனம் சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் கட்டணம் | 500.00 |
| 7. வீதி எல்லைச் சான்றிதழ் கட்டணம் | 500.00 |
| 8. நூலக அங்கத்தவர் விண்ணப்பப்படிவக் கட்டணம் | free |
| 9. நூலக அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் | free |
| 10. படக்காட்சி, வித்தைக்காட்சி விண்ணப்பக் கட்டணம் | 200.00 |
| 11. படவரைஞர்களாக பதிவு செய்தல் கட்டணம் | 1500.00 |
| 12. படவரைஞர் பதிவு புதுப்பித்தல் கட்டணம் | 2000.00 |
| 13. உத்தரவு பெற்ற நிலஅளவையாளராக பதிவு செய்வதற்கான கட்டணம் | 1500.00 |
| 14. உத்தரவு பெற்ற நிலஅளவையாளராக பதிவு புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 750.00 |
| 15. சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப்படிவக் கட்டணம் | 500.00 |
| 16. நெல்மூட்டை ஒன்று வெளியே கொண்டு செல்வதற்கான கட்டணம் | 10.00 |
| 17. விறகு, வைக்கோல், கிடுகு இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லல் | 100.00 |
| 18. அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களின் மேலதிக பிரதி வழங்குவதற்கான கட்டணம் | 150.00 |
| 19. வாகனங்கள் வாடகைக்கு விடுவதற்கான விண்ணப்பப் படிவக்கட்டணம் | 20.00 |
| 20. துவிச்சக்கர வண்டி உரிமத்திற்கான விண்ணப்பப் படிவக்கட்டணம் | 95.00 |
| 21. மிருகவரி விண்ணப்பப் படிவக்கட்டணம் | 46.00 |
| 22. காணி உபபிரிவிடுகையின் அனுமதிக்கான விண்ணப்பப்பத்திரம் | 500.00 |
| 23. வியாபார உரிம விண்ணப்பப் படிவக்கட்டணம் | 500.00 |

01 - 453/22

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்*

*153 (1) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி*

*அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மீதான வரி*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153(1) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி, கட்டட நோக்கங்களுக்கு அல்லது நிரந்தரமான அல்லது கிரமமான பயிர்ச்செய்கை நோக்கங்களுக்குப் பொருத்தமானதாகவிருக்கின்றவிடத்து அல்லது அத்தகைய காணியானது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பிரதேச சபையின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள செலவில் அபிவிருத்தி செய்யப்படக்கூடியதாகவிருந்து அத்தகைய காணியின் மீது கட்டடம் எதுவும் கட்டியெழுப்பப்படாதிருக்கின்றவிடத்து அல்லது உள்ள படியாக கட்டடங்களை அடக்கியுள்ள அத்தகைய காணியின் பரப்பளவானது அத்தகைய காணியின் முழுப்பரப்பளவிற்கும் பிரதேச சபையினால் தீர்மானத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தை விட குறைந்தவொரு விகிதாசாரத்தைக் கொண்டிருக்குமிடத்து அல்லது அத்தகைய காணி கிரமமான அல்லது நிரந்தரமான பயிர்ச்செய்கைக்கு உள்ளாக்கப்படாதிருக்கின்றவிடத்து ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் அக்காணியின் மூலதன இடவமைப்பு பெறுமதியின் இரண்டு சதவீதத்தை வரியாக காணியின் சொந்தக்காரரிடமிருந்து 01.01.2024 ஆந் திகதி முதல் ஆண்டு தோறும் அறவிடுவதென 2023.12.29 ஆந் திகதிய 17 (XXIII) ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*அழகேசன் பிரதீபன்,*
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2024, சனவரி 10.*

*01 - 453/23*

---

**குச்சவெளி பிரதேச சபை**

*அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அச்சட்டத்தின் 147 (1) ஆம் உட்பிரிவிற்கமைவாகவும் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிகாரம் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய இலக்கம் 520/7 அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியினை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கமைவாக, அதில் குறிப்பிடப்பட்ட 21 ஆம் இடைக்காலச் சட்டத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் தீங்கு விளைவிப்பவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும் போது முதலாம் அட்டவணையில் I ஆம் நிரலில் உள்ளபடி அவ் வியாபாரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமும் முதலாம் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்தப் பெறுமதிற்கமைவாக 2024 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அதற்கான கட்டணம் அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன். அத்துடன் இக் கட்டணத்தை 2024, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் குச்சவெளி பிரதேச சபைக்கு செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*தே.ஜெயவிஷ்னு,*
*செயலாளர்,*
*குச்சவெளி பிரதேச சபை*
*குச்சவெளி.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | தேநீர்க் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | இருப்பிட வசதியுடன் ஒரு விடுதி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | ஒரு சாப்பாட்டு விடுதியை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | பேக்கரியை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | முடி வெட்டும் இடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | இளைப்பாறும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | சலவைக் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | உணவு வகை விற்பனை நிலையம் வைதத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | சுவையூட்டி பானம் தயாரிக்கும் இடம் வைதத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | ஒரு குரோசுக்கு மேல் விற்பனைக்காக சுவையூட்டி பானம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | ஐஸ்கட்டி விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | குளிர்பானம் விற்பனை செய்யும் இடம் வைதத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | இனிப்பு உணவு வகைகள் விற்குமிடம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | பழவகை விற்றல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | மரக்கறி கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | தேங்காய் எண்ணெய் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | தேயிலை பகட் செய்து விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | பலசரக்கு கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | அரிசி மற்றும் நெல் வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | வெளிநாட்டு முகவர் நிலையம் வைதத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | மள்ளிகைப் பொருட்கள் தூள் செயது பக்கட் செய்தல், விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | புதப்படுத்திய மீன் அல்லது கருவாடு விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | கடலை, முறுக்கு பக்கட் செய்யும் வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | பால் பதனிட்டு விற்பனை மற்றும் தயிர் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | சூப் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | மின் ஒட்டு நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | மிருகங்கள்,பறவைகளுக்கான தீன் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | பறவை மற்றும் மிருகங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. | வேல்டிங் கராஜ் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. | தேங்காய் எண்ணெய் வடித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. | குடிநீர் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. | தானிய வகைள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 34. | பட்டறை வைத்து வியாபாரம் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 35. | காளான் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 36. | சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 37. | கொப்பரா விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 38. | கற்பூரம் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 39. | பால் சேகரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 40. | முட்டை மொத்த விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 41. | சிற்றுண்டி வகைகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**குச்சவெளி பிரதேச சபை**

தொழிற்துறை மீதான வரி அறவிடல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டதத்தின் 149 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவிற்கமைவாக குச்சவெளிப் பிரதேச சபை அதிகார எல்லைக்குள், கீழே உள்ள 02 ஆம் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாயினும் ஒரு தொழிற்துறையொன்றை 2024 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டால் அந்த தொழிலிற்கு 02 ஆம் அட்டவணையில் II ஆம் நிரலில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு தொழில் மீதான வரி அறவிடுவதெனவும் மற்றும் இக்கட்டணங்களை 2024, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் 150 (4) உப பிரிவிற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்வது எனவும் நிர்வாக கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை
குச்சவெளி.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 01. | புகைத்தல் வகைகள் (பீடி, சுருட்டு, சிகரட்) விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 02. | செங்கல் ஓடுகள் களஞ்சியபப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 03. | மட்பாண்டங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 04. | மினி சினிமா காட்டும் இடத்தை வைதத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 05. | பழைய இரும்புப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 06. | சீமெந்து விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 07. | எண்ணெய் களஞ்சியப்படுத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 08. | விறகுச்சாலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 09. | வீட்டுத் தளபாட விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | இரும்புப் பட்டறை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | ஆபரணங்கள் பட்டறை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | தங்கமுலாம் பூசும் இடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | நிறம் தீட்டும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | கள்ளு சேகரித்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | வைக்கோல் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | வெற்று போத்தல் சேகரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | புதிய, பழைய பத்திரகை சேரித்தல் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | சைக்கிள் மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**குச்சவெளி பிரதேச சபை**

*வர்த்தக வரி அறவிடல் -2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டதத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறிப்பிட்ட சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதும் ஒரு வரியைச் செலுத்துவதற்கு அவசியம் அல்லாத மற்றும் 152 ஆம் பிரிவின் (01) உப பிரிவின் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற இங்கு 03 ஆம் அட்டவைணயில் I ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் ஒரு தொழிலை குச்சவெளிப் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2024 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் அனைத்து நபர்களிடமிருந்தும், அந்த தொழிலின் 2024 ஆம் ஆண்டில் வருமானம் இங்கு கீழே 03 ஆம் அட்டவணையில் I ஆம் நிரலில் உள்ளபடி அவ் வியாபாரங்களுக்கான கட்டணம் 03 ஆம் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்தப் பெறுமதிற்கமைவாக 2024 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபைக்கு வர்த்தக வரியை செலுத்தல் வேண்டுமென நிர்வாக கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை
குச்சவெளி.

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

**அட்டவணை**

| *தொ. இல.* | *வியாபாரத்தின் தன்மை* |
|---|---|
| 1. | தொலைத் தொடர்பு கோபுரம் நடாத்துதல் |
| 2. | பாடசாலை காகிதாதிகள் விற்பனை |
| 3. | சாராயம் அல்லது பிறநாட்டு மதுபானச் சாலை விற்பனை |
| 4. | மேற்கத்திய மருந்து வகைகள் விற்பனை |
| 5. | ஆயுர்வேத மருந்து வகை விற்பனை |
| 6. | தனியார் மருந்துவ நிலையம் நடாத்துதல் |
| 7. | மூக்குக் கண்ணாடி கடை வைத்திருத்தல் |
| 8. | மின்பொருட்கள் விற்பனை |
| 9. | பரிசுப் பொருட்கள் விற்பனை |
| 10. | அனைத்து சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் |
| 11. | கட்டடப் பொருட்கள் விற்பனை |
| 12. | பிளாஸ்டிக் மற்றும் அலுமினியப் பொருள் விற்பனை |
| 13. | தரகர்களாக செயற்படுதல் |
| 14. | ஏலதாரர்களாக செயற்படுதல் |
| 15. | ஒப்பந்தக்காரர்களாக செயற்படுதல் |
| 16. | விநியோகத்தர்களாக செயற்படுதல் |
| 17. | வெளிநாட்டு முகவர் நிலையம் வைத்திருத்தல் |
| 18. | அடகு வைக்கும் நிலையம் வைத்திருத்தல் |
| 19. | தனியார் கல்வி நிலையம் நடாத்துதல் |
| 20. | லொட்ரிசீட் விற்பனை |
| 21. | வங்கி மற்றும் நிதி நிலையம் |
| 22. | காப்புறுதி நிலையம் நடாத்துதல் |
| 23. | பசளை மற்றும் இரசாயன நாசினிகள் வியாபாரம் |
| 24. | பாதணிகள் வியபாாரம் |
| 25. | தைத்து தயாரிக்கும் ஆடை விற்பனை |
| 26. | வீடியோ மற்றும் புகைப்படம் பிடிப்பு நிலையம் வைத்திருத்தல் |
| 27. | ரயர்களையும் ரியுப்களையும் உற்பத்தி மற்றும் விற்பனை |
| 28. | உல்லாசப் பயணச் சேவை நிலையம் நடாத்துதல் |
| 29. | நாட்டு மருந்துக்கடை நடாத்துதல் |

30. சட்டத்தரணிகள் சேவை வழங்கும் அலுவலகம் நடாத்துதல்
31. மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல்
32. எரிபொருள் சேகரித்தலும் விற்பனையும்
33. அனைத்து தொகை வியாபாரம்
34. செம்பு பொருட்கள் விற்பனை
35. வார்ப்பு உலோக தொழிற்சாலை நடாத்துதல்
36. தங்க ஆபரண வியாபாரம்
37. பத்திரிகை சேகரித்தலும் விற்பனை
38. சொத்துக்கள் மற்றும் காணி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடாத்துதல்
39. பொருட்கள் விநியோகித்தல்
40. வாகன விற்பனையாளர்
41. புட்சிட்டி நடாத்துதல்
42. இரத்தினம் வியாபாரம்
43. மோட்டார் வாகனங்கள், சைக்கிள் விற்பனை
44. துவிச்சக்கர வண்டி விற்பனை
45. துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனை
46. மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை
47. வாகனங்கள் திருத்துதல் மற்றும் விற்பனை
48. வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை
49. இராசாயனச் சேவை, இரத்த பரிசோதனை செய்தல் நிலையம்
50. பல நிறுவனங்களுக்கு ஒப்பந்தடிப்படையில் சேவை வழங்கும் நிலையம் நடாத்துதல் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள்
51. கேபல் இணைப்பு வழங்கும் நிலையம் நடாத்துதல்
52. பொது விளம்பர சேவை நிலையம் வைத்திருத்தல்
53. சீமெந்துப் பொருட்களை உற்பத்தி மற்றும் விற்பனை
54. தோல் பொருட்கள் விற்பனை
55. உல்லாசப் பயணச் சேவை நிலையம் நடாத்துதல்
56. காணிகள் விற்பனை செய்து கொடுக்கும் நிறுவனம் நடாத்துதல்
57. வாகனம் ஸ்டிக்கர் செய்யுமிடம் வைத்திருத்தல்
58. சாரதி பயிற்சி நிலையம் வைத்திருத்தல்
59. தொலைத்தொடர்பு நிலையம் நடாத்துதல்
60. கிராமிய வங்கி நடாத்துதல்
61. திருமண, மரணச்சடங்குகளுக்குரிய பொருட்கள் விற்பனை, வாடகைக்கு விடுதல்
62. தொலைபேசி திருத்துதல், விற்பனை
63. கணினி திருத்தல் விற்பனை
64. குளிரூட்டும் பெட்டிகள் விற்பனை
65. அதிகுளிரூட்டும் பெட்டிகள் விற்பனை
66. ஒலி பெருக்கிப் பொருட்கள் வாடகைக்கு வழங்கு் தல்
67. எரிபொருள் நிலையம் வைத்திருத்தல்
68. நிகழ்ச்சிகளுக்கு பொருட்கள் வாடகைக்கு வழங்குதல்
69. மரக்கன்று விற்பனை
70. வாகனங்கள் திருத்துதல் மற்றும் விற்பனை
71. சீட் வகைகளுக்கு குசன் செய்யும் நிலையம்
72. இரும்பு சேகரித்தலும் விற்பனையும்
73. வானொலி, தொலைக்காட்சி உதிரிப்பாகங்கள் விற்றல்
74. தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, தையல் இயந்திரம் விற்பனை
75. வைத்தியர்கள் பதிவுச் செய்தல்
76. மெத்தை செய்யும் ஸ்தாபனதந்தை வைத்திருத்தல்
77. புதினப் பத்திரிகை கடை அல்லது விநியோகம் செய்தல்
78. ஆடம்பரப் பொருட்களை வைத்திருத்தல்
79. இரும்புக் குழாய் விற்பனை
80. மில் வைத்திருத்தல்
81. கொங்கிறீட் மின்கம்பங்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்

82. கோழிப் பண்ணை நடாத்துதல்
83. நன்நீர் மீன் வளர்ப்பு
84. தொலைத் தொடர்பு சாதனங்கள் விற்பனை
85. புறாமலைப் படகுச் சேவை
86. இயந்திர மீன்பிடி வள்ளம்
87. இறால் பண்ணை நடாத்துதல்
88. மீன்வாடி நடாத்துதல்
89. அரிசி நெல் பசளை மொத்த விற்பனை நிலையம்
90. சோடா மொத்த விற்பனை நிலையம் வைத்திருத்தல்
91. ஐஸ் வாடி வைத்திருத்தல்
92. செங்கல் உற்பத்தியும் விற்பனையும்
93. ஓடு உற்பத்தியும் விற்பனையும்
94. சேதனப் பசளை விற்பனை
95. கொங்கிரீட் பொருட்கள் மற்றும் பிலொக் கல் உற்பத்தி, விற்பனை
96. புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல்
97. குடிநீர் உற்பத்தியும் வியாபாரமும்
98. உப்பளம் நடாத்துதல்
99. கொப்பறா உற்பத்தியும் வியாபாரமும்
100. பப்படம் உற்பத்தியும் வியாபாரமும்
101. கருப்பட்டி உற்பத்தியும் வியாபாரமும்
102. பல் வைத்தியசாலை நடாத்துதல்
103. கல்வாரி நடாத்துதல்
104. கேபல் வசதி ஏற்படுத்தும் நிலையம் வைத்திருத்தல்
105. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் நிலையம் நடாத்துதல்
106. தனியார் பாலர் பாடசாலை நடாத்துதல்
107. பொதிகள் அனுப்பும் சேவை
108. வாகனங்கள் கழுவுமிடம் நடாத்துதல்
109. வாளிகள் மற்றும் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை
110. சுவையூட்டி பானம் உற்பத்தியும் விற்பனையும்
111. ஐஸ் கிரீம் மற்றும் சுவையூட்டி பானம் உற்பத்தியும் விற்பனையும்
112. புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல்
113. வாகனம் திருத்தும் நிலையம் வைத்திருத்தல்
114. சங்கு மற்றும் சிப்பிகள் சேகரித்தலும் விற்பனையும்
115. ஊதுபத்தி உற்பத்தியும் விற்பனையும்
116. ஓமம் வோடர் உற்பத்தியும் விற்பனையும்
117. மாடு வியாபாரம்
118. ஆடு வியாபாரம்
119. கோழி வியாபாரம்
120. சூரிய ஒளியில் மின்சாரம் வழங்கும் நிலையம் நடாத்துதல்
121. சூரிய ஒளியினூடாக தொலைத்தொடர்புக் கோபுரம் நடாத்துதல்
122. காற்றின் வேகத்தினை பரிசீலிக்கும் நிலையம் நடாத்துதல்
123. ஏனைய விசேட கருத்திட்டம் நடாத்துதல்
124. சுற்றுலாப் பகுதியில் நடமாடும் இனிப்பு உணவு வகைகள் விற்பனை
125. கட்டடப் பொருட்கள் விற்பனை
126. ரயர்களையும் ரியுப்களையும் விற்பனை செய்யும் ஸ்தாபனம் வைத்திருத்தல்
127. மோட்டார் வாகனங்களுக்கு Body இணைக்கும் ஸ்தாபனத்தை வைத்திருத்தல்
128. தேயிலை வியாபாரம்
129. பன்றி பண்ணை நடாத்துதல்
130. இரும்பு பயிப் விற்பனையும்
131 தகரம் விற்பனை
132. சீட் விற்பனை
133. ஓடு விற்பனை
134. நீர்த்தாங்கி விற்பனை

135. கருங்கல் விற்பனை
136. மரபட்டறை நடாத்தல்
137. தகர வேலை செய்யுமிடத்தை வைத்திருத்தல்
138. மாட்டுப் பட்டி வைத்திருத்தல்
139. மின் இணைப்பு பொருட்கள் விற்பனை
140. ரயர்களையும் ரியுப்களையும் மீள் புதுப்பிக்கும் ஸ்தாபனம் வைத்திருத்தல்
141. ஜிம் சென்டர்
142. பலசரக்கு கடை வைத்திருத்தல்
143. அரிசி மற்றும் நெல் வியாபரம்
144. வெளி நாட்டு முகவர் நிலையம் வைத்திருத்தல்
145. மின் ஒட்டு நிலையம் வைத்திருத்தல்
146. பறவை மற்றும் மிருகங்கள் விற்பனை
147. வேல்டிங் கராஜ் வைத்திருத்தல்
148. தேங்காய் எண்ணெய் வடித்தல்
149. தானிய வகைகள் விற்பனை
150. சைக்கில் உதிரிப்பாகங்கள் விற்பனை
151. முட்டை மொத்த விற்பனை

**அட்டவணை - 03**

| நிரல் I<br>வர்த்தகத்தின் வருடாந்த வரவு | நிரல் II<br>செலுத்த வேண்டிய வருடாந்த வரி |
|---|---|
| 01. 6,000.00 ரூபாவிற்கு மேற்படாத பெறுகைகள் | இல்லை |
| 02. 6,000.00 ரூபாவிற்கு மேலும் ரூ.12,000.00 இற்கு மேற்படாத தொகைக்கு | 90.00 |
| 03. 12,000.00 ரூபாவிற்கு மேலும் ரூ.18,750.00 இற்கு மேற்படாத தொகைக்கு | 180.00 |
| 04. 18,750.00 ரூபாவிற்கு மேலும் ரூ. 75,000.00 இற்கு மேற்படாத தொகைக்கு | 360.00 |
| 05. 75,000.00 ரூபாவிற்கு மேலும் ரூ.1,50,000.00 இற்கு மேற்படாத தொகைக்கு | 1200.00 |
| 06. 1,50,000.00 இற்கு மேல் | 3,000.00 |

மேலும்,மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபாரங்கள் தொடர்பான கடந்த ஆண்டில் வருமான விபரங்களை அந்நிறுவனத்தின் முகாமையாளர், உரிமையாளர், கணக்காளர் அல்லது வேறு ஏதும் அதிகாரம் பெற்ற ஒருவரால் 2024, மாச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு குச்சவெளி பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதனையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

01 - 364/3

---

**குச்சவெளி பிரதேச சபை**

வருமானத்திற்கமைவாக கட்டணம் அறவிடல் (01%) - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 146 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சொல்லப்பட்ட சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதாவது ஒரு இடம் ஹோட்டலாக, சிற்றுண்டிச்சாலையாக மற்றும் வதிவிடம் நிலையமாக பயன்படுத்தப்படும் போது அவை 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த ஹோட்டல் களிலிருந்து அல்லது சிற்றுண்டிச்சாலையிலிருந்து அல்லது இருப்பிட நிலையத்திலிருந்து, மேலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்தப்படுகின்ற வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையம் அதேபோன்று, இரத்தினம் மற்றும் தங்க ஆபரண கடைகள், சுற்றுலாத்துறை சார்ந்த பொருட்கள் விற்பனை செய்தலும் அதற்குரிய அனைத்து விற்பனை நிலையத்திலிருந்தும், அவைகள் பயன்படுத்தப்படும் போது சென்ற வருடத்தில் கிடைத்த வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஒரு வீதம் (1%) அளவுடையதான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தப்பட வேண்டும் என நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபாரங்கள் தொடர்பான கடந்த ஆண்டில் வருமான விபரங்கள் அந் நிறுவனத்தின் முகாமையாளர், உரிமையாளர், கணக்காளர் அல்லது வேறு ஏதும் அதிகாரம் பெற்ற ஒருவரால் 2024, மாச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/4

---

**குச்சவெளி பிரதேச சபை**

ஆதன வரி அறவீடு - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆவது மற்றும் (2) ஆவது பகுதியின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து பகுதிகளும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக 666/3 ஆம் இலக்க 1991.11.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்டதற்கமைய குச்சவெளி பிரதேச சபை எல்லையில் உள்ள வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் வதிவிடங்கள் ஆகிய சகல அசையாச் சொத்துக்களின் மீதும் மற்றும் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்களிடமிருந்து வருடாந்தப் பெறுமதியின் நூற்றிற்கு 10% சதவீதமான தொகையை மதிப்பீட்டு வரியாக விதிப்பதென்றும் அதற்கான கட்டணங்களை அறவிடுவதென்றும் அத்துடன், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 135 ஆம் பிரிவின் கட்டளை பிரகாரம், வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதும், ஆதனங்களின் பௌதிக மாற்றங்களின் பிரகாரம் திருத்தப்படல் வேண்டுமென்றும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் குறித்த மதிப்பீட்டு வரிகள் காலாண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டுமெனவும், அத்துடன் குறித்த சட்டத்தின் 134 (7) ஆவது வகுப்பின் படி வருடாந்த வரி பின்வரும் ஏற்பாடுகளின் படி முழுமையாகச் செலுத்தும் பட்சத்தில் அதற்கான கழிவுகள் கீழ் குறிப்பிட்டவாறு வழங்கப்படும் எனவும், நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

(அ) 2024, சனவரி 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முழு வருடத்திற்கும் உரிய வரி முழுவதும் செலுத்தப்பட்டால், செலுத்தப்படும் தொகையின் 10% சதவீதம் கழிவாகவும்,

(ஆ) வரித்தொகை, தவணைக் கட்டணங்களாக செலுத்தப்படும் போது உரிய காலாண்டின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தப்படின் அவ்வாறு செலுத்தப்படும் தொகையின் 5% சதவீதம் கழிவாகவும், வரியிறுப்போருக்கு வழங்கப்படும்.

(இ) 161 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய காலாண்டிற்குள் உரிய வரித்தொகைகள் செலுத்தப் படவில்லையெனின் அவர்களிடமிருந்து குடியிருப்புக்களுக்கு 161 ஆம் பிரிவின் (அ) (i) ஆம் பிரிவு பிரகாரம் 10 சதவீதமான தொகையும் 161 ஆம் பிரிவின் (அ) பிரிவின் (ii) ஆம் பிரிவு பிரகாரம் வர்த்தக நோக்கத்திற்கு 15% சதவீதமான (15%) தொகையும் 161 ஆம் சரத்தின் (அ) பிரிவின் (iii) ஆம் பிரிவு பிரகாரம் குடியிருப்பு அல்லாத இடங்களுக்கு 20 சதவீதமான (20% ) தாமதக் கட்டணத் தொகை அறவிடப்படும் என்பதையும், நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/5

## குச்சவெளி பிரதேச சபை

*சேவைக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணம் அறவிடல் - 2024*

*1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனுமதிக் கட்டணமும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49(அ) ஆம் பிரிவின் மூலம் சுவீகரிக்கப்பட்டமை பரிசீலனைக் கட்டணமும் வீடு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் பிரிவின்) பிரகாரம் அத்துடன் அச் சட்டத்தின் 2021.07.08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க சட்டத்தினூடாக சேர்க்கபப் ட்டுள்ள விடயங்களுக்கமைவாகவும் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் 47(1) ஆம் பிரிவினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரமும் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கான சேவைகள் வழங்குவதற்காக கீழ் 03 அட்டவணையில் I ஆம் நிரலில் உள்ளபடி அச் சேவைகளுக்கான கட்டணம் 03ஆம் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு2024 ஆம் ஆண்டில் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

### அட்டவணை

| தொ. இல. | நிரல் I<br>விபரங்கள் | நிரல் II<br>கட்டணம் |
|---|---|---|
| 1. | சுற்றாடல் பரிசீலணைக் கட்டணம் | 500.00 |
| 2. | சூழல் அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4000.00 |
| 3. | அனைத்து புதுக் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான செயற்பாட்டுக் கட்டணம் பரப்பளவிற்கமைவாக (1986 ஆம் ஆண்டில் 692/09 மற்றும் 2021 ஆம் ஆண்டில் 2235/54 இற்கமைவாக உரிய பிரதேசங்களுக்கு அறவிடப்படும் | |
| 4. | எல்லைக் கோட்டு அத்தாட்சிப் பத்திரத்துக்கு | 250.00 |
| 5. | சுவீகரிக்கப்படாமை அத்தாட்சிப் பத்திரத்துக்கு | 250.00 |
| 6. | எல்லைக்கோட்டு பரிசீலணைக் கட்டணம் (வருமான பரிசோதகருக்கு 300.00) | 1000.00 |
| 7. | கிணறு நிர்மாணிப்பதற்கான பரிசீலணைக் கட்டணம் | 200.00 |
| 8. | மலசலகூடம் நிர்மாணிப்பதற்கான பரிசீலணைக் கட்டணம் | 300.00 |
| 9. | கட்டட விண்ணப்பப் படிவம் | 500.00 |
| 10. | காணி உபபிரிவிடல் கட்டணம் (1000M வரை) | 2000.00 |
| 11. | கட்டட விண்ணப்பப் பரிசீலணைக் கட்டணம் | 200.00 |
| 12 . | கட்டட விண்ணப்பப் படிவம் மற்றும் செல்லுபடி காலத்தை நீடித்தல் (ஆகக்கூடியது 03 வருட காலம் வரை) | |

| காலம் | வதிவிடம் | வர்த்தகம் |
|---|---|---|
| 1 வருடம் | 200.00 | 300.00 |
| 2 வருடம் | 300.00 | 400.00 |
| 3 வருடம் | 400.00 | 500.00 |

13. பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அனுமதி பெறாமல் நிர்மாணிக்கின்ற கட்டடங்களுக்கான தண்டப் பணம் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டங்களுக்கமைவாக (1986 ஆம் ஆண்டில் 692/09 மற்றும் 2021 ஆம் ஆண்டில் 2235/54) உரிய பிரதேசங்களுக்கு அறவிடப்படும். (இரு மடங்கு)

மதில்களுக்கு ஒரு சதுர அடிக்கு முன் கட்டணத்தை போன்ற இரு மடங்கு
அதிகார எல்லைக்குள் அனுமதி பெறாத நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கு
முன் அனுமதி வழங்குவதற்கு தண்டப் பணம் அறவிடல்

விபரம் (சதுர மீற்றர் ஒன்றிற்கு)

i. அத்திவாரம் பூர்த்தியாக்கப்பட்டுள்ள விடத்து
ii. கூரை மட்டம் வரை
iii. கூரையை அமைந்துள்ளவிடத்து — தங்குமிடம் வர்த்தகம்
என வேலைகள் அனைத்தும் பூர்த்தியான விடுத்து

14. தொலைபேசி கோபுரங்களுக்கான கட்டணம் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டங்களுக்கமைவாக (1986 ஆம் ஆண்டில் 692/09 மற்றும் 2021 ஆம் ஆண்டில் 2235/54) உரிய பிரதேசங்களுக்கு அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | சபை அனுமதி பெறப்படாமல் நடத்துகின்ற கோபுரத்தில் கொள்ளளவு (கன மீற்றர் x 200) என்ற அடிப்படையில் தண்டப் பணம் அறவிடப்படும். | 30,000.00 |
| 2. | தொலைபேசிக் கோபுரம் நடாத்துவதற்கான அனுமதிக் கட்டணம் | 40,000.00 |
| 3. | அதிகார எல்லைக்குள் நடாத்தப்படுகின்ற தொலைபேசி கோபுரங்களுக்கான முன் அனுமதிக் கட்டணம் | 7,000.00 |
| 4. | வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,000.00 |

15. நீர் இணைப்பிற்காக பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளை உடைக்கும் போது அறவிடும் கட்டணம் (ஒரு சதுர அடிக்கு)

| தொ. இ. | அளவு (சதுர மீற்றர் ஒன்றுக்கு) | ரூபா |
|---|---|---|
| 1 | கிரவல் வீதிக்கு | 800.00 |
| 2 | தார் வீதிக்கு | 1000.00 |
| 3 | கொங்ரீட் வீதிக்கு | 1600.00 |
| 4 | காபட் வீதிக்கு | 3400.00 |

16. தொ. இ. ஆதன வரி கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம்

| | |
|---|---|
| 1. சொத்துக்களின் உரிமை மாற்றத்திற்கான விண்ணப்பக் கட்டணம் (ATD Form) | 500.00 |
| 2. வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் விநியோகம் (Trade License) | 500.00 |
| 3. காணியின் பெயர் மாற்றத்திற்கான பரிசீலனைக் கட்டணம் | 1000.00 |
| அறுவைச்சாலை அனுமதிப்பத்திரக் கட்டணம் (வருடம்) | 6000.00 |
| i. ஆபத்துமிக்கதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் | 50.00 |
| ii. ஆபத்துமிக்கதும் அருவருக்கத்தக்கதுமற்ற ஏனைய தொழில்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் | 20.00 |

17. பொது நூலக கட்டணம்

| | |
|---|---|
| 1. நூல் நிலைய விண்ணப்பக் கட்டணம் | 20.00 |
| 2. நூல் நிலைய அங்கத்துவ விண்ணப்பக் கட்டணம் | |
| i. வயது வந்தோருக்கு (வைப்பு ரூபா 100.00) | 130.00 |
| ii. பிள்ளைகளுக்கு (வைப்பு ரூபா 100.00) | 120.00 |
| 3. நூல் நிலைய புத்தக தாமதக் கட்டணம் (தாமத நாள் ஒன்றிற்கு) | 1.00 |

| ஒரு பிரதி பண்ணும் சேவைக் கட்டணம் | இரண்டு பக்கத்திற்கு |
|---|---|
| B5 தாள் | 5.00 |
| A4 மற்றும் Legal | 7.00 |
| A3 Legal | 8.00 |

| 18. தொ. இ | வேறு கட்டணம் மற்றும் அறவீடுகள் | ரூபா |
|---|---|---|
| 1. | வரைபடங்களை அங்கீகரிப்பதற்கான கட்டணம் | 750.00 |
| 2. | கேள்விப்பத்திர தண்டப் பணம் | 10% |
| 3. | மலசலகூட நிர்மாணிப்பதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50.00 |
| 4. | கிணறு கட்டுவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50.00 |
| 5. | துவிச்சக்கர வண்டி விண்ணப்பப்படிவக் கட்டணம் | 20.00 |
| 6. | துவிச்சக்கரவண்டி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 50.00 |
| 7. | நீர் விநியோக விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50.00 |
| | i. தங்குமிடம் (வைப்பு ரூபா 300.00) | 200.00 |
| | ii. வர்த்தக (வைப்பு ரூபா 500.00) | |
| 8. | ஆபத்துக்குரிய மரங்கள் அகற்றுவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 20.00 |
| | i. பலா மரம் ஒன்றிற்கு | 500.00 |
| | ii. ஏனைய வேறு மரம் ஒன்றிற்கு | 300.00 |
| 9. | பிரதேச சபைக்குரிய கட்டடங்கள், மைதானங்கள் வாடகைக்கு விடல் | |
| | i. வியாபார விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) | 2,000.00 |
| | ii. வியாபாரமல்லாத விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) | 1000.00 |
| 10. | மிருகங்களை பதிவுச் செய்யும் கட்டணம் | 30.00 |
| 11. | முச்சக்கர வண்டி பதிவு செய்யும் படிவக் கட்டணம் | 50.00 |
| 12. | கரையோரப் பகுதியில் சபைக்குச் சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறிய கடைகளுக்கான கட்டணம் | 100.00 |

01 - 364/6

---

## குச்சவெளி பிரதேச சபை

### கட்டிட நிர்மாண வரைபடம் மற்றும் நில அளவைப்படம் அறவிடல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 21 ஆம் மற்றும் 78 ஆம் பிரிவு மற்றும் அச் சட்டத்தின் 47 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி அமைச்சரினால் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/07 அதிவிசேட வர்த்தமானியினை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 08 ஆம் இலக்க நியமத்துணை விதிக்கு அமைவாகவும் அத்துடன், வீடு மற்றும் நகர அபவிருத்தி கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் பிரிவின் பிரிவினூடாக, பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் 2024 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கட்டிட நிர்மாண திருத்தம் செய்தல் மற்றும் காணி உப பிரிவிடல் விடயங்களுக்கும் மற்றும் பிரதேச சபை சட்டத்தின் 49 ஆம் (அ, ஆ) பிரிவுகளுக்கமைவாக மதில் மற்றும் நுழைவாயில்கள் அமைப்பதற்கும் சட்டத்திற் கமைவாக அனுமதி வழங்குவதெனவும்,*

*அத்துடன், இவ் விடயங்களுக்கான கட்டணங்களை ஏற்கனவே உள்ள வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் புதிதாக வெளியிடப்பட்டுள்ள இலக்கம் மற்றும் 2235/ 54 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்திற்கமைவாக அறவிடுவது எனவும் மற்றும் இவ் விடயங்கள் மேற்கொள்ளும்போது அனுமதிகளை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில்*

உரிய சட்டங்களுக்கமைவாகவும் சுற்றரிக்கைகளுக்கமைவாகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வது எனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/7

---

## குச்சவெளி பிரதேச சபை

விளம்பர அறிவித்தல் மற்றும் பார்வைக்கு வைக்கும் சூழல் வரி அறவிடல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122, 221 (அ) மற்றும் 126 (vii)(ஈ) பிரிவுகளினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், 1988.08.23 ஆந் திகதிய 520/07ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிசேட வர்த்தமானியின் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணை உறுப்புரையினை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கமைவாக அதில் 39 ஆம் பிரிவின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் விளம்பர அறிவித்தலுக்காக காட்ச்சிப்படுத்தப்படும் (பெனர் உட்பட) அமைப்புக்கள் மற்றும் அறிவித்தலுகக்காக கீழ் வரும் 05 ஆம் அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ள கட்டணங்களை நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை 05**

| | விளம்பர விபரங்கள் | அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் | |
|---|---|---|---|
| | | மாதாந்தம் | வருடாந்தம் |
| i. | ஏதாவது கட்டட அமைப்பில் அல்லது விளம்பர பலகையொன்றில் விளம்பரப்படுத்துவதற்காக | 50.00 | 75.00 |
| | விளம்பர விபரங்கள் | | |
| ii. | யாராவது ஒருவரால் சுமந்து செல்லப்படுகின்ற அல்லது பயணம் செய்யும் வாகனத்திற்கு பொருத்தப்பட்ட அறிவித்தல்ஒன்றிற்காக அல்லது நிலைதாங்கியொன்றில் பொருத்தப்பட்டு விளம்பரப்படுத்தும் விளம்பரம் ஒன்றிற்கு (சினிமா அறிவித்தல் ஒன்றைத் தவிர | | |
| | சதுர அடி 6 க்கு அதிகரிக்காத அனைத்து சதுர அடிக்கும் | 25.00 | 40.00 |
| | சதுர அடி 6 க்கு அதிகரித்த அனைத்து சதுர அடிக்கும் | 25.00 | 50.00 |
| iii. | ஏதாவது தனியார் பொது வீடொன்றில் பொது கட்டடமொன்றில் சுவரில், மதிலொன்றில் பொது மக்களுக்கு காணக்கூடிய விதத்தில் விளம்பர அறிவித்தல் ஒன்றை விளம்பரப்படுத்தவோ, காட்சியளிப் பதற்கோ, ஒரு சதுர அடிக்கு | 50.00 | 150.00 |
| iv. | ஒளியூட்டப்பப்பட்ட விளம்பரங்கள்(ஒரு சதுர அடிக்கு) | 50.00 | 200.00 |
| v. | எ. ஒளியூட்டப்பபடாத விளம்பரங்கள் ஒரு சதுர அடிக்கு) | 40.00 | 150.00 |

01 - 364/8

## குச்சவெளி பிரதேச சபை

*க்(G)ரமபோன், ஒலி பெருக்கி இயந்திரம் ஆகியவற்றை செயற்படுத்தல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122 மற்றும் 126 (ix) (ஈ) பிரிவுகளின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 1988.08.23 ஆந் திகதிய 520/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணை விதியினை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கமைவாக, அதில் 13 ஆம் நியமத்துணை விதிக்கமைவாகவும் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதிக்குள் க்(பு)ரமபோன், ஒலி பெருக்கி சுயமாக சத்தத்தை உண்டு பண்ணும் எதிராலிக்கும் ஏதாவது உபகரணம் இயக்கும்போது அல்லது இயக்கத் திட்டமிடும் போது அல்லது இயக்க வேறொருவருக்கு இடமளிக்கும் போது அந்த அதிகரித்த சத்தத்தின் காரணமாக அல்லது அதன் எதிரொலியினால் அல்லது அதன் தொடர்ச்சியான இயக்கத்தினால் அயலில் வசிப்பவர்களுக்கு தொல்லை ஏற்படின் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இயக்கத் திட்டமிட்டால் அதற்கு அனுமதிப் பத்திரக் கட்டணமாக ஒரு நாளைக்கு ரூபா 2000.00 இனை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.*

*01 - 364/9*

---

## குச்சவெளி பிரதேச சபை

*முச்சக்கர வண்டிகள் தரிப்பிடக் கட்டணம் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 126 (vii)(ஊ) பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் குச்சவெளி பிரதேச சபையினால் 1998.02.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை பகுதி (IV) (அ) பிரிவில் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணை விதியினை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கமைவாக, அதில் 06 ஆம் நியமத்துணை விதிக்கமைவாகவும் 06 ஆம் அட்டவணை பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பின்வரும் இடங்கள் முச்சக்கர வண்டி வாகன தரிப்பிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எனவும் இதில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு பதிவுக் கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூபா 1000.00 அறவிடப்படும் என்பதனையும் அனுமதிப்ப த்திரம் 2024ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அடுத்து வரும் வருடத்தில் இதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது எனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.*

**அட்டவணை - 06**

முச்சக்கர வண்டித் தரிப்பிட விபரம்

1. பெரிய குளச் சந்தி
2. கோணேச புரிச் சந்தி
3. இக்பால் நகர் பல்கலைக்கழக வீதிச் சந்தி

4. மீனவர் வீதிச்சந்தி - இக்பால் நகர்
5. நிலாவெளி சமுர்த்தி அலுவலகத்திற்கு முன்பாக
6. நிலாவெளி 8 ஆம் மைல் கல் சந்தி
7. நிலாவெளி, ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக
8. நிலாவெளி புதிய சந்தை கட்டடத்திற்கு முன்பாக
9. வேலூர் சந்தி
10. நிலாவெளி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்பாக
11. நிலாவெளி இலங்கை வங்கிக்கு முன்பாக
12. நிலாவெளி பீச் ஹோட்டல் முன்பாக
13. கோபாலபுரம் பாடசாலை வீதிச் சந்தி (A - Park)
14. கோபாலபுரம் பீச் ரிசோர்ட் கலைக்சி ஹோட்டலிற்கு
15. கோபாலபுரம் கன்னகி அம்மன் கோவிலிற்கு முன்பாக
16. கோபாலபுரம் சாகிரா ஹோட்டலிற்கு முன் (B - Park)
17. வாழையூற்று ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்பாக
18. இறக்கக்கண்டி மீன்பிடி சந்தி
19. கும்புறுபிட்டி பேக்கா சந்தி
20. கும்புறுபிட்டிச் சந்தி
21. குச்சவெளி வைத்தியசாலைக்கு முன்பாக
22. காசிம் நகர் பள்ளிக்கு முன்பாக
23. ஜாயா நகர் பள்ளிக்கு முன்பாக
24. புடவைக்கட்டு பாலத்தடி
25. புல்மோட்டை திருகோணமலைச் சந்தி
26. புல்மோட்டை வைத்தியசாலைக்கருகில்
27. புல்மோட்டை 4 ஆம் வட்டாரம் தாருசலாம் பள்ளியருகில்
28. கனிப்பொருள் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால்
29. கொக்கிளாய் முகத்துவாரத்தடி
30. வாழையூற்று பீச் றிசோர்ட் சந்தி
31. வாழையூற்று எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக
32. புளிய மரத்தடி சந்தி(ஜெய்க்கா சந்தி)

*01 - 364/10*

---

**குச்சவெளி பிரதேச சபை**

வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122 (1) ஆம் உப பிரிவுடன் சொல்லப்பட்ட அச் சட்டத்தின் 69 ஆம் மற்றும் 126 ஆம் (vii) (ஊ) பிரிவினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அத்துடன் 2009.12.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகைப் பகுதி (IV) (அ) வெளியிடப்பட்ட நியமத்துணை விதியினை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதற்கமைவாகவும், அதில் 06 ஆம் நியமத்துணை விதிக்கமைவாகவும் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் சபைக்கு சொந்தமான வாகனத் தரிப்பிடங்களில் சபை அனுமதியினைப் பெற்றுள்ள முச்சக்கர வண்டிகள் தவிர ஏனைய வாகனங்களுக்குக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் வாகனத் தரிப்பிடக் கட்டணம் நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.*

**அட்டவணை 07**

| | வாகனத்தின் பெயர் | அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் மாதாந்தம் | வருடாந்தம் |
|---|---|---|---|
| 01. | சபை அனுமதி பெறப்படாத முச்சக்கர வண்டி ஒன்றிற்கு | 300.00 | 3600.00 |
| 02. | சபை அனுமதி பெறப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் தவிர ஏனைய வாகனங்கள் | நாள் ஒன்றுக்கு | |
| | (i). வேன், கார், ஜீப் வண்டி, மோட்டார் வண்டி, ஏனைய முச்சக்கர வண்டி | 50.00 | |
| | (ii). பஸ் (இ.போ.ச.),லொறி, டிபர், டெய்லர் பெட்டி உட்பட வாகனங்கள் | 100.00 | |
| | ஏனைய மோட்டார் வாகனங்கள் | 75.00 | |
| | துவிச்சக்கர வண்டி | இலவசம் | |

01 - 364/11

---

**குச்சவெளி பிரதேச சபை**

உற்சவ நிகழ்ச்சிகளின் போது நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் அறவீடு செய்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தினால் 122, 126 (ix) (ஈ) பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் சபைக்கு சொந்தமான இடங்களில் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறும் போது சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 08 ஆம் அட்டவணை பிரகாரம் வாகனத் தரிப்பிடக் கட்டணம் நியமித்து 2024 ஆம் ஆண்டில் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல. | வாகனத்தின் பெயர் | அனுமதிப்பத்திரக் கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூபா |
|---|---|---|
| 1 | பஸ் வண்டிக்கு | 200.00 |
| 2 | லொறி வண்டிக்கு | 150.00 |
| 3 | வேன் வண்டிக்கு | 100.00 |
| 4 | லேன்மாஸ்டருக்கு | 50.00 |
| 5 | முச்சக்கர வண்டிக்கு | 50.00 |
| 6 | மோட்டார் வண்டிக்கு | 30.00 |
| 7 | துவிச்சக்கர வண்டிக்கு | இலவசம் |

01 - 364/12

## குச்சவெளி பிரதேச சபை

*சபை மைதானங்கள் குத்தகைக்கு விடுதல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆம் உப பிரிவுடன் சொல்லப்பட்ட 126 (xii) (xiv) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும் 1952 ஆம் ஆண்டில் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ், கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள துணைவிதியினை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைவாக, அதில் குறிப்பிடப்பட்ட 02 ஆம் துணைவிதி பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள மைதானங்களை 09 ஆம் அட்டவணை பிரகாரம் வாடகைக்கு விடுவதெனவும் அதற்கான கட்டணங்கள் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*135 ஆம் பிரிவின் கட்டளை பிரகாரம், நில வரியிலிருந்து விலக்களிப்பு வழங்குவதெனவும் நிர்வாக கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை - 09**

| தொ. இ. | விளையாட்டு மைதானத்தின் பெயர் | |
|---|---|---|
| 1 | இக்பால் நகர் விளையாட்டு மைதானம் | |
| 2 | நிலாவெளி விளையாட்டு மைதானம் | |
| 3 | குச்சவெளி விளையாட்டு மைதானம் | |
| 4 | புல்மோட்டை விளையாட்டு மைதானம் | |
| 5 | ஏனைய மைதானங்கள் | |
| | வியாபார விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) | 2000.00 |

வியாபாரமல்லாத விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) 1000.00
பொது நலன்புரி நிகழ்வுகள் தொடர்பாக - அறவிடுவதில்லை

01 - 364/13

---

## குச்சவெளி பிரதேச சபை

*வழங்குநர் மற்றும் விநியோகத்தர்களை பதிவு செய்தல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரகாரம், 2024 ஆம் ஆண்டிற்கு பிரதேச சபையில் வழங்குனர் மற்றும் விநியோகத்தர்களை பதிவு செய்வதற்கும் அதற்கான பதிவுக் கட்டணம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 10 ஆம் அட்டவணை பிரகாரம் நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை - 10**

| தொ. இல. | பதிவாளரின் விபரம் | கடட் ணம் ரூபா |
|---|---|---|
| 1 | வழங்குனர் | 1000.00 |
| 2 | விநியோகத்தர் | 1000.00 |
| 3 | வழங்குனர் மற்றும் விநியோகத்தர் | 2000.00 |

01 - 364/14

---

**குச்சவெளி பிரதேச சபை**

ஏலதாரர்கள் மற்றும் தரகர்கள் பதிவு செய்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை 147 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரகாரம்,2024 ஆம் ஆண்டிற்கு பிரதேச சபையில் வழங்குனர் மற்றும் விநியோகத்தர்களை பதிவு செய்வதற்கும் அதற்கான பதிவுக் கட்டணம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை பிரகாரம் நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக் ப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல. | பதிவாளரின் விபரம் | கடட் ணம் ரூபா |
|---|---|---|
| 1 | ஏலதாரர் | 3000.00 |
| 2 | தரகர் | 3000.00 |
| 3 | ஏலதாரர் மற்றும் தரகர் | 5000.00 |

01 - 364/15

---

**குச்சவெளி பிரதேச சபை**

படம் வரைஞர்கள் பதிவு செய்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான படங்கள் வரைவதற்கு ரூபா 5000.00 கட்டணம் 2024.03.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி பிரதேச சபையில் பதிவு செய்து அனுமதி பெறப்படல் வேண்டுமெனவும் மற்றும் கட்டட வரைபடங்கள் வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அமையப்பட வேண்டும் எனவும் (1986 ஆம் திகதிய 692/09 ஆம் இலக்கத்திற்கமைவாகவும் மற்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ள 2021.07.08 ஆம் திகதிய 2235/54 இலக்கத்திற்கமைவாகவும் அதற்கான கட்டணங்களை 2024.01.01 ஆம் திகதியிலிருந்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/16

## குச்சவெளி பிரதேச சபை

வாகனங்கள் மற்றும் மிருகங்கள் மீதான வரி அறவிடுதல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சொல்லப்பட்ட அச்சட்டத்தின் 148 ஆம் பிரிவின் (4) ஆம் துணைப் பதிவேட்டில் விதிமுறைகளின் கீழ் (30நாட்களுக்கு குறைவாக இருப்பின் கட்டணம் செலுத்தப்பட தேவையில்லை எனவும் 30 நாட்களைவிட அதிகம் எனில் கட்டணம் செலுத்தல் வேண்டும் எனவும் ) பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டில் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ், கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய இலக்கம் 520/07 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியினை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைவாக அதில் குறிப்பிடப்பட்ட 40 ஆம் துணைவிதி பிரகாரமும் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாகவும் கட்டணம் அறவிடுவதெனவும் அதனை 148 ஆம் பிரிவின் (3) ஆம் துணைப் பதிவேட்டில் விதிமுறைக்கமைவாக மாச்சு 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தினை செலுத்தப்ப டல் வேண்டும் என நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

### அட்டவணை

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனம் முச்சக்கர வண்டி, மோட்டார்சைக்கிள் துவிச்சக்கர வண்டி, ரிக்சோ தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வாகனத்திற்கும் | |
| 2. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி அல்லது முச்சக்கர வண்டிக்கு | 25.00 |
| | (அ) வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படின் | 15.00 |
| | (அ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 04.00 |
| 3. | ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் | 20.00 |
| 4. | ஒவ்வொரு கை வண்டிக்கும் | 10.00 |
| 5. | ஒவ்வொரு ரிக்சோ சோடிகம் | 7.00 |
| 6. | ஒவ்வொரு குதிரைக்கும் | 15.00 |
| 7. | ஒவ்வொரு யானைக்கும் | 50.00 |

இத்துடன் படிவக் கட்டணங்களாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 16.00 உம் ஏனையவற்றிற்கு ரூபா 20.00 உம் அறவிடப்படும்.

26 அங்குல விட்டத்தை விடவும் குறைந்த சில்லுடைய சிறுவர் வாகனம், வில்பெரோ பெரும்பாலும் தனியாரிடத்தில் மாத்திரம் வியாபார நோக்கம் கருதி பயன்படுத்தப்படும் கைதள்ளு வண்டிகள் வியாபார நோக்கம் கருதி பயன்படுத்தப்படாத கைதள்ளு வண்டிகள் இத்தகைய வரி அறவீட்டிலிருந்து விடுவிக்கப்படுகின்றது.

இந்தத் துணைப் பதிவேட்டில் "வியாபார நடவடிக்கை" என்பது விற்பனைக்காக வேறு வகையில் ஏதேனும் வியாபார அல்லது தொழில் நோக்கம் கருதி ஏதேனும் பொருட்கள், பண்டங்கள், எழுத்து மூல அல்லது அச்சடிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு உள்ளடங்களாகும்.

01 - 364/17

---

## குச்சவெளி பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி அறவிடுதல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு அல்லது நிரந்தர அல்லது தொடர்ச்சியாக நெற்செய்கை செய்வதற்கு உசிதமான காணியில்*

01. கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாதிருப்பின் அல்லது
02. அந்தக் காணியை உரிய முறையில் அல்லது நிரந்தரமாகவோ நெற்செய்கைக்கு உட்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில்
03. அந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களினால் தரையில் உண்மையாகவோ மூடப்பட்டிருக்கும் நிலப்பரப்பு, மொத்தக் காணியின் 2/3 இற்கு சமனாக இல்லாத சந்தர்ப்பத்தில் காணியின் மொத்த நிலப்பரப்பானது குறைவாயின்

மேற்குறிப்பிட்ட காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதவும் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாகக் கருதப்பட்டு காணிகள் மீது 153 ஆம் பிரிவு (1) (உ) உப பிரிவு பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக அந்த ஒவ்வொரு காணியின் மூலதனப் பெறுமதியின் 2% வருடாந்த வரியொன்று நிர்ணயிப்பதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/18

---

**குச்சவெளி பிரதேச சபை**

காணி அபிவிருத்தி தொடர்பாக கட்டணம் அறவிடுதல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவின் மற்றும் 19 (xxxii) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள காணிகளின் மண் அல்லது வேறு திரவியங்களை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும் பொது 12 ஆம் அட்டவணை பிரகாரம் கட்டணம் அறவிடுவதெனவும் வறிய குடும்பங்களுக்கு காணியின் அளவு 10 பர்ச் வரை எனில் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 30.00 அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல. | பதிவாளரின் விபரம் | அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் | |
|---|---|---|---|
| மண் | வேறு பொருட்கள் | தொடர்பாக ரூபா | தொடர்பாக ரூபா |
| 01. | ஒரு சதுர அடிக்கு முதல் 300 மி. மீ. வரை | 100.00 | 150.00 |
| 02. | ஒரு சதுர அடிக்கு 300 மி. மீ. இலிருந்து 750 மி. மீ. வரை | 400.00 | 500.00 |
| 03. | ஒரு சதுர அடிக்கு 750 மி. மீ. இலிருந்து 1500 மி. மீ. வரை | 600.00 | 700.00 |
| 04. | ஒரு சதுர அடிக்கு 1500 மி. மீ. வரை மேலதிகமானது | 700.00 | 800.00 |

01 - 364/19

## குச்சவெளி பிரதேச சபை

*ஏக்கர் வரி அறவிடுதல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எலல்லக்குள் அமைந்துள்ள, மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 135 ஆம் பிரிவின் கட்டளை பிரகாரம், நில வரியிலிருந்து விலக்களிக்கப்படாததும், நில வரிக்கு உட்பட்டதுமான காணிகளுக்கு நிரந்தரமாக அல்லது தொடர்ச்சியாக விவசாயம் மேற்கொள்ளப்படுகின்ற,*

*01.* *ஹெக்டயார் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து காணிகளுக்கும் மேற்படி காணியில் சகல ஹெக்டேயர்களுக்கும் 2024 ஆம் ஆண்டில் ரூபா 10.00 வும்,*

*02.* *ஹெக்டயார் ஐந்திற்கு குறைவான மற்றும் ஹெக்டயார் ஒன்றிற்கு குறைவற்ற (1-5 இடப்பட்ட) அனைத்து காணிகளுக்கும் 2024 ஆம் ஆண்டில் வருடத்திற்கு ரூபா 50.00 இனை அறவிடுவதெனவும்,*

*மேலும் பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,2024 ஆம் ஆண்டிற்கான கட்டணம் 2024, மாச்சு 31, யூன் 31, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளின் முடிவுறும் காலப் பகுதிக்கு முன்னர் சமமான நான்கு தவணைகளில் செலுத்த வேண்டும் என்பதனையும்,*

*மேலும் குறித்த சட்டத்தின் 134(7) ஆவது வகுப்பின்படி வருடாந்த வரி பின்வரும் ஏற்பாடுகளின்படி முழுமையாகச் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தின் கீழ் குறிப்பிட்டவாறு கழிவுகள் வழங்கப்படுமெனவும்,*

*(அ)* *முழு வருடத்திற்கும் உரிய வரி முழுவதும் 2024, சனவரி 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டால், செலுத்தப்படும் தொகையின் 10% சதவீதம் கழிவாகவும்,*

*(ஆ) வரித்தொகை, தவணைக்கட்டணங்களாக செலுத்தப்படும் போது உரிய காலாண்டின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தப்படின் அவ்வாறு செலுத்தப்படும் தொகையின் 5% சதவீதம் கழிவாகவும், வரி யிருப்போருக்கு வழங்கப்படும் என்பதையும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*தே.ஜெயவிஷ்னு,*
*செயலாளர்,*
*குச்சவெளி பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

*01 - 364/20*

---

## குச்சவெளி பிரதேச சபை

*காணி விற்பனை மீதான வரி அறவிடல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள, ஏதேனும் காணியொன்று ஏலதாரர், தரகராக அல்லது அவரின் சேவகர் அல்லது பிரதிநிதி மூலம் ஏலத்திலோ அல்லது வேறு வகையிலோ காணிகள் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அவ் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தில் 1% சதவீதம் வரிப்பணமாக பிரதேச சபைக்கு செலுத்தப்படல் வேண்டும் எனவும் 154 ஆம் பிரிவின் (1) (2) உப பிரிவிற்கமைய வரி செலுத்துமாறு அறிவித்து 14 நாட்களுக்குள்ளே இக் கட்டத்தினை செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அதன்*

பின்னர் சகல செலவீனங்களையும் செலுத்துவதற்கு ஏற்படும் என்பதை நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/21

---

**குச்சவெளி பிரதேச சபை**

விறகு கொண்டு செல்வதற்கான கட்டணம் அறவிடல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள, பிரதேசத்தின் மூலம் விறகு கொண்டு செல்வதற்கான கட்டணம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 13 ஆம் அட்டவணை பிரகாரம் கட்டணம் நியமித்து அதனை அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல | வாகனத்தின் பெயர் | அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | அதிகார எல்லைக்குள் பதிவாக உள்ள நபர் | அதிகார எல்லைக்குள் பதிவாகாத நபர் | |
| | | ஒரு மாதத்திற்கு | ஒரு முறைக்கு | ஒரு தினத்திற்கு |
| 1. | பெரிய லொறி ஒன்றுக்கு | 750.00 | 1000.00 | 3000.00 |
| 2. | டிப்பர் ஒன்றுக்கு | 500.00 | 1000.00 | 2000.00 |
| 3. | சிறிய லொறி ஒன்றுக்கு | 500.00 | 750.00 | 1500.00 |
| 4. | உழவு இயந்திரத்திற்கு | 400.00 | 500.00 | 1000.00 |
| 5. | சிறிய உழவு இயந்திரத்திற்கு | 200.00 | 200.00 | 400.00 |
| 6. | மோட்டார் வண்டிக்கு | இலவசம் | இலவசம் | இலவசம் |
| 7. | துவிச்சக்கர வண்டிக்கு | இலவசம் | இலவசம் | இலவசம் |

01 - 364/22

## குச்சவெளி பிரதேச சபை

*பகிரங்க நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடல் களியாட்ட வரிக்கட்டளைச்சட்டம் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களின் பிரகாரம் மற்றும் 1946 களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் 12 வது அத்தியாயத்தின் 02 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தில் விளக்கப்பட்ட ஏதேனும் களியாட்டமொன்றைப் பார்ப்பதற்காக நுழையும் போது செலுத்தப்படும் கட்டணத்தில் 15% இற்கு சமனான வரியொன்று நியமித்து அறவிடுவதெனவும் மேலும், விகாரை ஒன்றின், வாசிகசாலை அல்லது அபிவிருத்தி வேலையொன்றின் நிமித்தம் காட்சிப்படுத்தப்படும் காட்சி ஏற்றுக்கொள்ளப்பட்ட காட்சிகளின் பேரில் நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் அனுமதிப்படி களியாட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமெனவும் அதேபோன்று (176 அத்தியாயம்) சினிமா அத்தியாயத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம்,கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப் படி கட்டணம் நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.*

| | | |
|---|---|---|
| *01.* | *தற்காலிக சினிமா கலைக் காட்சி, மெஜிக் நிகழ்ச்சி, சர்கஸ் நிகழ்வு மற்றும் நாடக அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு நாளொன்றுக்கு* | *ரூபா 2000.00* |
| | *மேலதிக நாளொன்றுக்கு* | *ரூபா 400.00* |
| *02.* | *இசை நிகழ்ச்சிக்கு நாளொன்றுக்கு* | *ரூபா 1000.00* |

*01 - 364/23*

---

## குச்சவெளி பிரதேச சபை

இசைவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள் தங்குமிடங்கள் மற்றும் வதிவிடங்கள் வசிக்கின்றபோது அதில் வசித்து 30 நாட்களுக்குள் வதிவிட சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இதுவரை அச்சான்றிதழைப் பெறாதவர்கள் 2024.03.31 ஆந்திகதிற்கு முன்னர் அதற்கு, விண்ணப்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக தண்டப்பணம் அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்படடுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.*

*01 - 364/24*

## குச்சவெளி பிரதேச சபை

### இறைச்சி மற்றும் மீன் கருவாடு விற்பனைக்கான கட்டணம் அறவிடல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ix (ஏ) கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும், இலங்கைச் சனநாயக் சோசலிசக்குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி அமைச்சரினால் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியினை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைவாக, அதில் 19 மற்றும் 20 வது நியமத்துணை விதிகள் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதிக்குள் மீன், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிகள் (சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இறைச்சிக் கடைகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களில்) என்னால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரம் அவைகளை விற்பனை செய்யும் போது அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தும் போது இவைகளுக்கு விசேட அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் அத்துடன்இதற்கான கட்டணம் 13 ஆம் அட்டவணை பிரகாரம் நியமித்து அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை -13**

| தொ. இல. | விற்பனை செய்யும் பொருட்கள் | வருடாந்தக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சி, பக்கட் செய்யப்பட்ட கோழி இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்தல் | 10000.00 |
| 2 | ஆட்டிறைச்சி மற்றும் பக்கட் செய்யப்பட்ட கோழி இறைச்சி விற்பனை செய்தல் | 6000.00 |
| 3 | ஆட்டிறைச்சி மாத்திரம் விற்பனை செய்தல் | 3000.00 |
| 4 | மீன் மற்றும் கருவாடு விற்பனை செய்தல் | 3000.00 |
| 5 | மீன் மாத்திரம் விற்பனை செய்தல் | 1500.00 |
| 6 | கருவாடு மாத்திரம் விற்பனை செய்தல் | 1500.00 |

01 - 364/25

---

## குச்சவெளி பிரதேச சபை

### வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ் மற்றும் சுவீகரிக்கப்படாத ஆதன வரி சான்றிதழ் கட்டணம் அறவிடுதல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 49 (அ) பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள காணிகளுக்கு வீதி எல்லைக்கோட்டுச் சான்றிதழ் மற்றும் சுவீகரிக்கப்படாத ஆதனவரி சான்றிதழ் வழங்கும் போது வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ் மற்றும் சுவீகரிக்கப்படாத ஆதனவரி சான்றிதழுக்கு ரூபா 500.00 மற்றும் பரிசீலனைக் கட்டணம் 200.00 அறவிடுவதெனவும் மற்றும் காணி உறுதியில் உள்ள பெறுமதிக்கேற்ப ரூபா 10,000.00 ற்கு உட்பட்ட தொகைக்கு 1% உம் மற்றும் காணி உறுதியின் பெறுமதி ரூபா 100,000.00 மேற்பட்ட காணிகளுக்கு 0.5% உம் அறவிடுவதெனவும் இத் தொகை ரூபா 5,000.00 உட்பட்டால் ஒரு ஆறுமாதக் காலத்திற்கும் ரூபா 5,000.00 - 10,000.00 வரை ஒரு வருட காலத்திற்கும் ரூபா 10,000.00 - 20,000.00 வரை மூன்று வருடங்களுக்கும் 20,000.00 - 50,000.00 வரை நான்கு வருடங்களுக்கும் மற்றும் 50,000.00 மேற்பட்டால் ஐந்து வருடங்களுக்கும் செல்லுபடியாகும் எனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை
குச்சவெளி.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/26

## குச்சவெளி பிரதேச சபை

*நீர்க் கட்டணம் அறவிடுதல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 126 மற்றும் 16 ஆம் பிரிவினூடாக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணை விதியின் 34 ஆவது பிரிவின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபையினால் வழங்குகின்ற நீரிற்கான கட்டணம் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*50 லீற்றருக்கு உட்பட்ட 1L 1.00*
*50 மேற்பட்ட ஒவ்வொரு 1L 1.65*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

*01 - 364/27*

---

## குச்சவெளி பிரதேச சபை

*வெட் வரி அறவிடுதல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் நடாத்தப்படுகின்ற களியாட்ட நிகழ்வுகள், விளையாட்டு மைதானத்தினை வாடகைக்கு வழங்குதல் மற்றும் நாடக அரங்கேற்றம், கட்டிடம் நிர்மாணித்தல் மற்றும் வியாபார வரி அதேபோன்று சுற்றாடல் அனுமதிக் கட்டணம் போன்றவற்றிலிருந்து இறைவரித் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வெட் வரி நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

*01 - 364/28*

---

## குச்சவெளி பிரதேச சபை

*தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2024*

*1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரமும் மற்றும் அச்சட்டத்தின் 23(அ) என்னும் பிரிவினால் மத்திய சுற்றாடல் அதிகார சபை இச்சபைக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டும் பிரதேச சபை எல்லைக்குள் நடாத்தப்படுகின்ற,மத்திய சுற்றாடல் அதிகார சபையினால்*

குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு அச்சபையின் சட்டம் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக 03 வருட காலத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கும் அதற்காக கட்டணம் முதலீட்டுத் தொகைக்கமைவாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 14 ஆம் அட்டவணை பிரகாரம் அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

முதலீடு செய்யப்பட்ட தொகை தொடர்பான விபரம்

1. 100,000.00 இற்கு குறைந்த
2. 100,001.00 தொடக்கம் 250,000.00 வரை
3. 250,001.00 தொடக்கம் 500,000.00 வரை
4. 500,001.00 தொடக்கம் 1,000,000.00 வரை
5. 1,000,000.00 இற்கு மேல்

பரீட்சித்தல் கட்டணம், உத்தரவுப் பத்திரக் கட்டணம் ஆகியவை 2000 நவெம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க 2008.02.01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I இல் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக 2024 ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் அறவிடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இக்கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களை எவ்விதத்திலும் பாதிக்காது என்பதனையும் மேலும், இத்தால் அறிவிக்கின்றேன்.

01 - 364/29

---

## குச்சவெளி பிரதேச சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் - 2024

குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் (xi) (எ) பிரிவினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அத்துடன் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்) 17(1) பகுதி மற்றும் 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சி பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 20 மற்றும் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சிக் கடைகளை நிபந்தனைகளுக்கமைவாக கேள்வி கோருவதெனவும் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு பிரதேச சபை எல்லைக்குள் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி வியாபாரம் செய்வதற்கு நிபந்தனை அடிப்படையில் அனுமதி வழங்குவதெனவும் மற்றும் உரிய அதிகாரிகளுடைய அனுமதிக்கமைவாக அறுவை செய்கின்ற மாடொன்றிக்கு ரூபா 100.00 செலுத்துதல் வேண்டும் எனவும் அதேபோன்று மிருகவதை சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 17 (1) பகுதியின் கீழ் எனக்களிக்கப்படட் அதிகாரத்தின் கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்டுள்ள தினங்களிலும் அரசினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்களிலும் என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும் மிருகங்களை அறுவை செய்தலும், விற்பனைக்காக தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்படல் வேண்டும் என அறியத்தருகின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

1. தைப்பொங்கல்
2. மாட்டுப் பொங்கல் (தைப்பொங்கல் மறுநாள்)
3. இலங்கை சுதந்திர தினம்
4. மகா சிவராத்திரி தினம்
5. பெரிய வெள்ளிக் கிழமை
6. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள்)
7. உலக மிருக தினம்
8. தீபாவளி பெருநாள்
9. மாதாந்த நோன்மதி தினம்
10. தமிழ், சிங்கள புதுவருடப்பிறப்பின் இருநாட்களும்
11. ஏனைய அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தும் தினங்கள்.

01 - 364/30

---

**குச்சவெளி பிரதேச சபை**

தனியார் அறுவைச்சாலை மற்றும் இறைச்சி விற்பனை நிலையம் நடாத்துல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மிருகவதை சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 17(1) பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் 1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்மானியின் பகுதி iv(ஆ) உள்ளூராட்சி பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 20 மற்றும் 32 ஆம் பிரிவின் கீழ் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் சபையினால் குத்தகைக்கு வழங்கப்படுகின்ற அறுவைச்சாலைகளைத் தவிர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் தனியார் நிறுவனத்தினால் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி வியாபார நிலையங்கள் நடாத்துதல் மற்றும் சுகாதார வழிமுறைகளுக்கமைவாக பக்கட் செய்து அல்லது வேறு முறைக்கு இறைச்சி விற்பனை செய்யும் நோக்கத்துடன் சிறிய அல்லது பெரிதளவில் தனியார் நிறுவனத்தினால் அறுவைச் சாலை நடாத்துவதற்கு அனுமதி வழங்குவதெனவும் மற்றும் என்னால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரம் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சி கொண்டு விற்பனை செய்யும் போது நிபந்தணை அடிப்படையில் அக் கடைகளுக்கு விசேட கட்டணம் நியமித்து அறவிடுவதெனவும் இதற்காக விசேட அனுமதிப் பத்திரம் சபையில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும்,

01. அத்துடன் தனியார் நிறுவனத்தினால் நபரினால் அறுவைச்சாலை நடாத்தப்படுவதென்றால் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு வியாபார உரிமைப் பத்திரக் கட்டணம் செலுத்தி உரிய அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அத்துடன், உரிய அதிகாரிகளுடைய அனுமதிக்கமைவாக அறுவை செய்கின்ற (குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகள் தவிர) மாடொன்றிற்கு ரூபா 25.00 மேலதிகமாக செலுத்துதல் வேண்டும்.(இதன்போது மாடொன்றிக்கு ரூபா 125.00 செலுத்தல் வேண்டும்.)

I. மாட்டிறைச்சி அறுவைச்சாலைக் கட்டணம் ரூபா 2,000.00
II. ஆட்டிறைச்சி அறுவைச்சாலைக் கட்டணம் ரூபா 1,000.00

02. மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி வியாபார நிலைய வருடாந்தக் கட்டணமாக உப அலுவலக ரீதியில் அந்தந்த பகுதிக்கு சபையினால் வழங்கப்பட்டுள்ள அதிகூடிய குத்தகைத் தொகையிலிருந்து 10% மேலதிகமாக சபைக்கு செலுத்தி ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் உரிய நிறுவனத்திற்கு , நபருக்கு அனுமதி வழங்குவதற்கு சபை தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் மேலும், இதற்கான மாதாந்தக் கட்டணத்தினை ஒவ்வொரு மாதம் 10 ஆந் திகதிககு முன்னராக செலுத்தப்பட வேண்டும் எனவும் அத்திகதிக்கு பின்னர் செலுத்தும்போது 10% தண்டப்பணம் அறவிடப்படும் என்பதனையும் அத்துடன், குத்தகைத் தொகையிலிருந்து 1/3 பங்கு முற்பணமாக வைப்பிலிட வேண்டும் எனவும்,

03. மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வியபாரத்திற்காக கொண்டு செல்வதற்காக நாள் ஒன்றுக்கு ரூபா 300.00 விசேட கட்டணம் அறவிடுவதெனவும் இதற்கான அனுமதிப் பத்திரத்திரம் ஆககூடியது ஒரு மாத காலத்திற்கு மாத்திரம் வழங்குவதெனவும் அத்துடன் சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அறுவைச்சாலைகளுக்கான விதிமுறைகலும்

இந்த அறுவைச்சாலைகளுக்கு செல்லுப்படியாகும் எனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/31

---

## குச்சவெளி பிரதேச சபை

கட்டாக்காலியாக திரியும் மிருகங்களை தடை செய்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 66 (1), (3), (4) ஆம் அத்தியாயங்களில் காட்டப்பட்டுள்ள விதிகளின்படியும் இச் சட்டத்தின் 126 ஆம் (xi) (ஊ) பிரிவினால் குச்சவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பிரதான பாதைகளில் அல்லது உள்ளக பாதைகளில் பொது இடங்களில் கட்டாக் காலியாக திரியும் ஆடுகள், மாடுகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு அதற்கென அமைக்கப்பட்டுள்ள பொது இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்படடு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டில் கட்டணங்கள் அறவிடப்படும் என்பதை நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

### அட்டவணை

| | | ரூபா. ச |
|---|---|---|
| 1. | கால்நடை பிடிப்பதற்கான விதிப்பனவு (தலா ஒன்றுக்கு) | 1500.00 |
| 2. | கால்நடைகளை பாதுகாப்பதற்கான விதிப்பனவு (தலா ஒன்றுக்கு) | 750.00 |
| 3. | கால்நடை ஒன்றுக்கான பராமரிப்புக்கான விதிப்பனவு | 500.00 |
| 4. | மிருகத்தினை 24 மணி நேரத்திற்குள்ளாக மீட்டுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் | |
| 5. | மேலதிக நாள் ஒன்றுக்கு | 500.00 |

அவ்வாறு தடை செய்யப்படும் மிருகங்களுக்கான மேற்கூறிய கட்டணத்தை செலுத்தி மீட்டுக் கொள்ளத் தவறினால் மிருகங்கள் கைப்பற்றப்பட்டு 10 நாட்களில் தடை செய்யப்படட் மிருகங்களை பிரசித்த ஏல விற்பனையில் விற்கப்படுவதுடன் ஏலத்தில் கிடைக்கும் பணம் பிரதேச சபையின் கணக்கில் வரவு வைக்கப்படும்.எனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01 - 364/32

---

## குச்சவெளி பிரதேச சபை

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் - நாய்கள் பதிவுக்கட்டணம் - 2024

குச்சவெளி பிரதேச சபையின் 126 ஆம் (xi) (ஈ) பிரிவினால் நிர்வாக எல்லைக்குள் வைத்திருக்கும் நாய்களுக்கு நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) இன் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டிலிருந்து பதிவுக் கட்டணங்களாக நாய் ஒன்றுக்கு ரூபா 5 வீதம் அறவிட விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்கான கட்டணங்கள் 2024 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு

முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/33

---

**குச்சவெளி பிரதேச சபை**

*கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு வீதிப் பராமரிப்புக் கட்டணம் - 2024*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தால் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களுக்குள் மேற்படி விடயத்திற்கான பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 17 ஆம் அட்டவணை பிரகாரம் கட்டணம் நியமித்து அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்படடுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| கிரவல் | ஒரு கியூப்பிற்கு | 100.00 |
| மணல் | ஒரு கியூப்பிற்கு | 100.00 |
| கருங்கல் | ஒரு கியூப்பிற்கு | 100.00 |
| கல் மற்றும் ஓடு | ஒரு கியூப்பிற்கு | 100.00 |

01 - 364/34

---

**குச்சவெளி பிரதேச சபை**

*நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாது திரிந்து விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு கட்டணம் - 2024*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வரத்தமானியின் பகுதி ஐஏ (ஆ) - உள்ளூராட்சி பகுதியில், அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் கீழ் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் திரிந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்குக் கீழ் குறிக்கப்பட்டுள்ள 18 ஆம் அட்டவணையின் படி 2024.01.31 ஆந் திகதி முதல் கட்டணம் அறவீடு செய்ய வேண்டும் என நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கினறேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| | | ரூபா. ச |
|---|---|---|
| 1. | லொறி மூலம் விற்பனை செய்யும் வியாபாரம் - முட்டை, தேங்காய், ஐஸ்கிறீம் (நாளொன்றுக்கு) | 100.00 |
| 2. | கை வண்டிகள், தள்ளு வண்டிகள் மூலம் உடல் நலத்திற்கு ஏற்ற உணவுப் பொருட்கள், மென்பானங்கள் விற்பனை செய்தல் (வருடாந்தம்) | 1,000.00 |
| 3. | வாகனம் மூலம் பால் விற்பனை (வருடாந்தம்) | 1,000.00 |
| 4. | கேட்போர் கூட வாடகை (நாளொன்றிற்கு) | 1,000.00 |
| 5. | வியாபார நோக்கத்திற்காக உள்வரும் வாகன நுழைவுக் கட்டணம் (நாளொன்றிற்கு) | 250.00 |
| 6. | கேபிள் இணைப்பு தூண் ஒன்றிற்கான கட்டணம் (ஒரு வருடத்திற்கு) | 5000.00 |

*01 - 364/35*

---

**குச்சவெளி பிரதேச சபை**

காணி உபபிரிவிடல் மற்றும் கட்டட நிர்மாண வரைபடம் அனுமதித்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 221(அ) அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 122 மற்றும் 126 சரத்துக்ளினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் காணி உப பிரிவிடலுக்கான அனுமதி வழங்குதல் மற்றும் கட்டிட நிர்மாணம் மற்றும் ஏனைய நிர்மாணப் பத்திரங்களுக்கு அனுமதி பத்திரக் கட்டணம் வழங்குவதற்கு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடுவதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

*01 - 364/36*

---

**குச்சவெளி பிரதேச சபை**

விசேட கருத்திட்டம் செயற்படுத்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21, 78 மற்றும் 47 (1) ஆம் பிரிவின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520 / 7 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதி (08 ஆம்) இடைக்காலச் சட்டத்திற்கமைவாகவும் இடைக்காலச் சட்டத்திற்கமைவாகவும் வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 1986 ஆம் திகதிய 692/09 ஆம் இலக்கம் மற்றும் 2021.07.08 ஆம் திகதிய 2235/54 ஆம் இலக்க சட்டத்திற்கமைவாகவும் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கருதத்திட்டங்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதெனவும் அதற்கான கட்டணங்கள் வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடுவதெனவும் அத்துடன் இவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு முறையான அனுமதியினைப் பெறப்படல் வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை இல. 03**

| தொ. இல. | விசேட வியாபாரம் |
|---|---|
| 1. | சூரிய ஒளியில் மின்சாரம் வழங்கும் நிலையம் நடாத்துதல் |
| 2. | சூரிய ஒளியினூடாக தொலைத் தொடர்பு கோபுரம் நடாத்துதல் |
| 3. | காற்றின் வேகத்தை பரிசீலிக்கும் நிலையம் நடாத்துதல் |
| 4. | தொலைபேசி கோபுரம் நடாத்துதல் |
| 5. | ஐஸ் வாடி வைத்திருத்தல் |
| 6. | ஐஸ் தொழிற்சாலை நடாத்துதல் |
| 7. | நன்நீர் மீன் வளர்ப்பு |
| 8. | இறால் வளர்ப்பு |
| 9. | கோழி வியாபாரம் |
| 10. | ஏனைய வியாபார கருத்திட்டம் நடாத்தல் |

01 - 364/37

---

**குச்சவெளி பிரதேச சபை**

சபையின் கழிவகற்றும் தாங்கி/இயந்திரம் வாடகைக்கு விடுதல் கட்டணம் - 2024

1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்படடுள்ள அதிகாரத்தின் பிரகாரம், சபைக்கு சொந்தமான மேல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் இவ் விடயங்கள் தொடர்பாக புதிதாக சபைக்கு வாகனம் கிடைக்கப் பெற்றால் அவைகளையும் வாடகைக்கு வழங்குவதெனவும் இதற்கான கட்டணங்களை கீழ் குறிப்பிட்டவாறு அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**அட்டவணை**

| தொ. இல. | வாகனம் (எரிபொருளும் இயக்குநரும் உட்பட) மணித்தியாலத்திற்கும் | நாள் ஒன்றுக்கான வாடகை ரூபா | மேலதிக ஒவ்வொரு வாடகை ரூபா | வைப்பு ரூபா |
|---|---|---|---|---|
| 1. | உழவியந்திரம் பெட்டியுடன் 8 மணித்தியாலத்திற்கு | 4200.00 | 300.00 | 4200.00 |
| 2. | Bibrater 8 மணித்தியாலத்திற்கு | 2600.00 | 250.00 | 2600.00 |
| 3. | மிக்சர் மெசின் 8 மணித்தியாலத்திற்கு | 3200.00 | 250.00 | 3200.00 |
| 4. | நீர்த்தாங்கி உழவியந்திரத்துடன் 8 மணித்தியாலத்திற்கு | 4300.00 | 350.00 | 4300.00 |
| 5. | ரோலர் 06 மணித்தியாலத்திற்கு (8 - 10 தொன்) | 7500.00 | 600.00 | 7500.00 |
| 6. | ரிப்பர் 8 மணித்தியாலத்திற்கு | 7500.00 | 500.00 | 7500.00 |
| 7. | நீர்த்தாங்கி 8 மணித்தியாலத்திற்கு | 1500.00 | 100.00 | 1500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | கலிபவுசர் | சபை எல்லைக்குள் ரூ. ச. | சபை எல்லைக்கு வெளியே ரூ. ச. | |
| | (1) பாடசாலை, மதத்தலங்கள் (ஒரு லோட்) | 3000.00 | 3500.00 | - |
| | (2) வீடுகள் (ஒரு லோட்) | 6000.00 | 6500.00 | - |
| | (3) அரச திணைக்களங்கள், வங்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியார் நிலையங்கள் (ஒரு லோட்) | 8500.00 | 9000.00 | - |
| | (4) உல்லாச விடுதிகள் (ஒரு லோட்) | 15000.00 | 17000.00 | - |
| 9. | பெக்கோ இயந்திரம் (JCB) ஒரு மணித்தியாலத்திற்கு | 3500.00 | 4000.00 | - |

| தொ. இல. | | பிரதேச சபை வாகனம் ரூபா | தனியார் வாகனம் ரூபா |
|---|---|---|---|
| 1. | 25 Kg இற்கு உட்பட்ட கழிவுகள் 1 தடவைக்கு | 1000.00 | 250.00 |
| 2. | 25 Kg - 50 Kg இற்கு உட்பட்ட கழிவுகள் 1 தடவைக்கு | 1500.00 | 500.00 |
| 3. | 50 Kg இற்கு மேற்பட்ட கழிவுகள் 1 தடவைக்கு | 2000.00 | 750.00 |

01 - 364/38

---

## குச்சவெளி பிரதேச சபை

*சபைக்கு சொந்தமான மயானம் மையவாடிகள் பிரகடனப்படுத்தலும் நினைவுச் சின்னம் நிர்மாணித்தலும்-2024*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 127 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரமும் சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நோக்கத்திற்கமைவாகவும் நடவடிக்கை மேற்கொள்ளவதெனவும் தற்போதுள்ள இடப் பற்றாக்குறை காரணமாக எதிர்கால சந்ததிகளின் நலன் கருதி சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மயானம் மையவாடிகளின் நினைவுச் சின்னம் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

**மயானம், மையவாடி விபரம்**

| தொ. இ. | பெயர் |
|---|---|
| 1. | பெரியகுளம் |
| 2. | இக்பால் நகர் |
| 3. | இக்பால் நகர் |
| 4. | அடம்பொடை |
| 5. | கோபாலபுரம் |
| 6. | இறக்கக்கண்டி |
| 7. | வாழையூற்று |
| 8. | கும்புறுப்பிட்டி |
| 9. | சலப்பையாறு |
| 10. | வீரஞ்சோலை |
| 11. | வடலிக்குளம் |
| 12. | காசிம் நகர் |

13. ஜாயா நகர்
14. புடவைக்கட்டு
15. செந்தூர்
16. மதுரங்குடா
17. கல்லறாவ
18. புல்மோட்டை 1
19. புல்மோட்டை 3
20. புல்மோட்டை 4
21. தென்னமரவாடி

01 - 364/39

---

## குச்சவெளி பிரதேச சபை

பகிரங்க சந்தைகள் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/07 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் அமைந்துள்ள கடற்கரை பகுதியில் உள்ள கடைகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதெனவும் அதற்கான கட்டணம் 2024.01.01 ஆம் திகதியிலிருந்து அறவிடுவதெனவும் அனுமதி பெறப்படாமல் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்வதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/40

---

## குச்சவெளி பிரதேச சபை

வாகனங்களை ஓட்டுதல் அதில் வேகம் மற்றும் நிறை நிர்ணயித்தல் மற்றும் பிரதேச சபை வீதிகளை பெயரிடுதல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் (vii) (இ) பிரிவின் பிரகாமும் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/ 7 அதி விசேட வர்த்த மானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியின் 03 மற்றும் 06 ஆம் பிரிவுகளின் அதிகாரத்தின் பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் வாகனங்களை நிற்பாட்டி வைத்தல் மற்றும் ஓடுதல் தொடர்பாகவும் மற்றும் அதிகார எல்லைக்குள் பயணிக்கும் வாகனங்களில் வேகம் மற்றும் நிறை நிர்ணயிப்பதற்கேதுவாகவும பிரதேச சபை சட்டத்தின் 24 - 27 ஆம் பிரிவிற்கமைவாக சபைக்கு சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கேதுவாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதென நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

தே.ஜெயவிஷ்னு,
செயலாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குச்சவெளி.

01 - 364/41

**குச்சவெளி பிரதேச சபை**

*கிணறு மற்றும் மலசலகூடம் நிர்மாணித்தல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 89 தொடக்கம் 92 ஆம் சட்ட பிரிவின் பிரகாரமும் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியின் 12 ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரமும் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் மலசலகூடம் புதிதாக நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்யும் போது பிரதேச சபை அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும். 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் (xix) பிரிவின் பிரகாமும் 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துணைவிதியின் 35 மற்றும் 37 ஆம் பிரிவு பிரகாரம் குச்சவெளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் புதிதாக கிணறு நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்யும் போது பிரதேச சபை அனுமதியினைப் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் (xiii) (அ தொடக்கம் ஐ வரை) பிரிவுகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*தே.ஜெயவிஷ்னு,*
*செயலாளர்,*
*குச்சவெளி பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

*01 - 364/42*

---

**குச்சவெளி பிரதேச சபை**

*விசேட திண்மக்கழிவு அகற்றும் சேவை - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்படடுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சபைக்கு சொந்தமான பகுதிகளில் விசேட திண்மக்கழிவு அகற்றும் சேவை மேற்கொள்வதெனவும் அதற்கான கட்டணம் ரூபா 6000.00 லோட் ஒன்றிக்கு அறவிடுவதெனவும் நிர்வாக கூட்டத்தில் தீர்மானிக்கப்படடுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*தே.ஜெயவிஷ்னு,*
*செயலாளர்,*
*குச்சவெளி பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*குச்சவெளி.*

*01 - 364/43*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*